Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, NOVEMBER 29, 2022

செவ்வாய்க்கிழமை நவம்பர் 29, 2022 | ஒளி: 08 கதிர் 153 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

# 21/4 சந்தேக நபர் வெட்டிக் கொலை

மட்டக்குளிய பகுதியில், நபரொருவர் நேற்று (28) பகல் படுகொலைச் செய்யப்பட்டுள்ளார்.

காரொன்றில் வந்த இனந்தெரியாத நபர்களே அவரை வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். காயமடைந்த அந்த நபர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி, உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைத்

தொடர்ச்சி P2

இலங்கையில் முதலீடுகளை செய்ய

# இதுவே சரியான தருணம்



இலங்கையில் முதலீடுகளை செய்ய நினைக்கும் முதலீட்டாளர்களுக்கு இதுதான் சரியான சந்தர்ப்பமாகும். இப்போது முதலீடுகளை செய்தால் வெகு விரைவில் அதற்கான பிரதிபலன் கிடைக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுடனான சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையில் இருந்து அடுத்த ஆண்டு விடுபட முடியும். வறுமை குறைந்த அதேநேரம் வளங்கள் அதிகரிக்கும் இஸ்திரமான பொருளாதாரத்துடன் எமது வேலைத்திட்டங்களை ஆரம்பித்து, அடுத்த சில ஆண்டுகள் எம்மால் முன்னோக்கி செல்ல முடியும் என நினைக்கின்றோம். இலங்கையில் முதலீடுகளை செய்ய நினைக்கும் நபர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால் இதுதான் உங்களுக்கு சரியான சந்தர்ப்பமாகும். உங்களுக்கான பங்குகளை பெற்றுக்கொள்ள சரியான நேரம் வந்துள்ளது என பொறுப்புடன் கூறுகின்றேன். நீங்கள் இங்கு முன்னெடுக்கும் முதலீட்டின் பெறுமதியை பாருங்கள். அதேபோல் இந்த முதலீடுகளின் மூலமாக கிடைக்கும் வருமானம் மற்றும் காலம் என்பவற்றை கருத்தில் கொள்ளுங்கள். இப்போது முதலீடுகளை செய்தால் வெகு விரைவில் அதற்கான பிரதிபலன் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் இலக்கை தவறவிட்டாலும் ஜனவரி மாதம் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் இருக்க முடியும். அப்படி நடந்தால் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர்களுக்கான

# தீர்வை வழங்க காலம் கனிந்துள்ளது

பா.நிரோஸ்



தமிழ் மக்களுக்கு நீண்டகால தீர்வொன்றை வழங்குவதற்கான காலம் வந்துவிட்டதாக தெரிவிக்கும் வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு யுத்தத்தை வெற்றிக்கொள்ள முடிந்த எம்மால், சமாதானத்தை வெற்றிகொள்ள இதுவரையில் முடியவில்லை. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியும், முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் இணைந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் சில திருத்தங்களை ஏற்படுத்தினார்கள். இந்த திருத்தத்தால் பல வருடங்களாக சிறைச்சாலையில் இருந்த தமிழர்களை விடுதலை செய்ய முடிந்தது எனவும் தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஏனைய அமைச்சுகளுடன் இணைந்து புதிய சட்டத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுப்போம்.

தொடர்ச்சி P2

# சீனாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வேண்டாம்

நிதர்சன் வினோத்

சீனாவுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் செய்துகொள்ளப்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பில், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள், சீன அரசாங்கத்தினால் சீன விவசாயப் பல்கலைக்கழகத்துக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU),

தொடர்ச்சி P2



# 20 மாணவர்களை குளவிகள் கொட்டின

பி.கேதீஸ்

லிந்துலை பகுதியிலுள்ள இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று (28) குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்காக லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த மாணவர்களை குளவி கொட்டியதுடன், குளவி கொட்டுக்கு இலக்காகிய 13 மாணவர்களும் 7 மாணவிகள் அடங்களாக 20 பேரும் ஆசிரியர் ஒருவரும் லிந்துலை பிரேத வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

# இன்று அமெரிக்கா செல்கிறார் அலி சப்ரி



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். இன்று காலை அவர் இலங்கையில் இருந்து புறப்படவுள்ளதுடன், அமெரிக்க தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வோஷிங்டனுக்கு செல்லும் நிலையில், நாளை (30) அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அந்தோனி பிளிங்கனை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

எதிர்வரும் 6ஆம் திகதி வரையில் அமெரிக்காவின் உயர் மட்ட குழுவினருடன் இடம்பெறும் சந்திப்புகளில் இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறை முக்கிய நிகழ்ச்சி நிரலாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மனித உரிமை மீறல்கள் மற்றும் பொருளாதார குற்றங்கள் என கூறப்படும் இலங்கையில் அரசியல் தலைவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பிலே அமெரிக்கா அழுத்தம் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையால் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த இலங்கை நிர்ப்பந்திக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# நீங்கள் இலங்கையின் நம்பகமான நண்பன்

## ரஷ்ய தூதுவரிடத்தில் பிரதமர் தெரிவிப்பு

ரஷ்யா சர்வதேச மன்றங்களில் இலங்கையின் இறையாண்மைக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்துவரும் நம்பகமான நட்பு நாடாகும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற இலங்கைக்கான புதிய ரஷ்ய தூதுவர் லிவான் எஸ். சாகர்யான் (Levan S. Dzhagaryan) அவர்களுடனான சந்திப்பின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# வாழைச்சேனை மீனவர்கள் அந்தமான் தீவில் கண்டுபிடிப்பு

எச்.எம்.எம்.பர்ஸான்

செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி ஆழ்கடலுக்குச் சென்று காணாமல் போன வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த நான்கு மீனவர்களும் அந்தமான் தீவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

காணாமல் போன மீனவர்கள் தொடர்பான தகவல் 64 நாட்களின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை (27) மாலை 4.30 மணியளவில் கிடைத்துள்ளதாக மீனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அந்தமான் தீவிலிருந்த தமது தொலைபேசிக்கு அழைப்பொன்று வந்ததாகவும் அதில், மீனவர்கள் படகுடன் மீட்கப்பட்டு தற்போது கடல் பாதுகாப்பு படையின் பாதுகாப்பில் இருப்பதாகவும் தமக்கு தகவல் கிடைத்ததாக காணாமல் போன மீனவர் உமர்தீன் அசன் அலி என்பவரின் மகன் முஜாஹித் கூறினார்.

குறித்த தகவல் தொடர்பில், மீனவர் சங்கம் மற்றும் துறைமுக அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் முஜாஹித் மேலும் தெரிவித்தார்.

# மீனவர்களுக்கு ஓய்வூதியம்

மீனவ சமூகத்தினருக்கான ஓய்வூதியத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

விவசாய காப்புறுதி சபையின் ஊடாக இந்த ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்தார்.

# செலவுகள் இரத்து

நாட்டில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட நிதி கட்டமைப்பிற்குள், அரச நிறுவனங்களின் துறைசார் நிகழ்வுகள் மற்றும் வெளி நிகழ்வுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை இடைநிறுத்த ஜூன் மாதம் 13ஆம் திகதி அமைச்சரவை தீர்மானித்தது.

அதனடிப்படையில், அரச நிறுவனங்களில் முன்னெடுக்கப்படும் பல்வேறு நிகழ்வுகளுக்கான செலவுகளை இரத்து செய்து சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவினால் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ரணிலின் நல்லிணக்க சமிக்ஞைக்கு நன்றி

## சபையில் கூட்டமைப்பு தெரிவிப்பு

பா.நிரோஸ்

முன்னாள் போராளிகளை நினைவுக்கூருவதற்கு எந்த விதமான இடையூறுகளையும் ஏற்படுத்தாதிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நல்லிணக்க சமிக்ஞையை வரவேற்பதாக தெரிவிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ரணிலுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார்.

தொடர்ச்சி P2



# டயானாவுக்கு நோட்டீஸ்

## மனுவை பரிசீலிக்க அனுமதி

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் ஏனைய பிரதிவாதிகளை டிசெம்பர் 12 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நோட்டீஸ் பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (28) உத்தரவிட்டதுடன், மனுவை அன்றையதினம் பரிசீலிப்பதற்கும் அனுமதி வழங்கியது.

பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க டயானா கமகே தகுதியற்றவர் என்று தகுதிமுறை வினவும் நீதிப் பேராணை (ரிட்) உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி, சமூக ஆர்வலர் ஓஷால ஹேரத் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான

தொடர்ச்சி P2

# ஒரு முட்டைக்கு ரூ. 1 இலட்சம் அபராதம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் கட்டுப்பாட்டு விலையை மீறி 60 ரூபாவுக்கு முட்டை விற்பனை செய்த வர்த்தகரை ஒரு இலட்சம் ரூபாயைஅபதாரமாக செலுத்துமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர்போல், உத்தரவிட்டு தீர்ப்பளித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் அதிகாரசபை உதவி பணிப்பாளர் ஆர்.எப். அன்வர் சதாத் தலைமையிலான குழுவினர் சம்பவதினமான வியாழக்கிழமை (24) திகதி திடீர் சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

தொடர்ச்சி P2



வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி

# இலங்கைக்கு மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க இலங்கைக்கு வழங்கப்பட்ட மருந்துப் பொருட்கள் நேற்று (28) கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் வைத்து பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டன. இந்த மருந்துப் பொருட்களை மருந்துத் தட்டுப்பாடு உள்ள மருத்துவமனைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

இந்தியாவும், மேற்குலகமும்

# இலங்கையை பொறிக்குள் சிக்கவைக்க முயற்சிக்கின்றன

எஸ்.கணேசன்



இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தமது பொறிக்குள் இலங்கையை சிக்க வைப்பதற்கு இந்தியாவும், மேற்குலகமும் முயற்சிக்கின்றன என்று 'உத்தர லங்கா சபாகய'வின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட மக்கள் சந்திப்பு ஹங்குராங்கெத்தையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ரணிலின் நல்லிணக்க...

தங்களது மனங்களில் பூசிக்கின்ற போராளிகளுக்கு அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்வுகள் மக்கள் வெள்ளத்தில் நிறைவேறியது. இதற்கு நல்லிணக்க சமிக்ஞையை ஜனாதிபதி வழங்கியிருந்தமை வரவேற்கத்தக்கது. ஒரு சில இடங்களில் தடங்கல்கள் ஏற்பட்டிருந்தாலும் கூட பெரும் நெருக்கடிகளை வழங்காது நினைவஞ்சலிகளை செலுத்த வாய்ப்பு வழங்கிய ஜனாதிபதிக்கு நன்றி எனவும் தெரிவித்தார்.

## ஒரு முட்டைக்கு...

இதன்போது அரசாங்கம் அறிவித்த முட்டையின் விலை 50 ரூபாயாக இருந்தபோது அதனை மீறி வர்த்தகர் ஒருவர் 60 ரூபாய்க்கு முட்டை விற்பனை செய்து வந்த நிலையில் அவரை பிடித்ததுடன் அவருக்கு எதிராக உடனடியாக அன்றைய தினம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர்போல் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை அபதாரமாக ஒரு இலட்சம் ரூபாய் செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.
இதேவேளை முட்டையின் கட்டுப்பாட்டு விலை 50 ரூபாயாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் மொத்த வியாபரிகளிடமிருந்து 58 ரூபாய்குத்தான் முட்டையை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதுடன் அதனை 60 ரூபாய்க்கு விற்கவேண்டியுள்ளதுடன் அதில் இலாபமாக 50 சதம் மட்டும் பெற்றுக் கொள்ள முடியும்.
இவ்வாறான நிலையில் வடிக்கையாளர்களுக்கு 60 ரூபாய்க்கு முட்டையை விற்கும் போது கட்டுப்பாட்டு விலையை மீறி கூடிய விலைக்கு முட்டையை விற்றதாக நுகர்வோர் அதிகாரசபை எமக்கு எதிராக வழக்கு தொடருகின்ற போது ஒரு முட்டைக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபதாரம் விதித்தால் என்ன செய்வது. எனவே முட்டை வியாபாரம் வேண்டாம் என முட்டை வியாபாரத்தில் ஈடுபட்ட பல வர்த்தகர்கள் முட்டை வியாபாரத்தை நிறுத்தியுள்ளனர். இதனால் முட்டைக்கு மாவட்டத்தில் பலத்த தட்டுபாடு நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## டயானாவுக்கு...

சோபித ராஜபகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், தேவையான ஆவணங்களுடன் நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்யுமாறு மனுதாரர் மற்றும் சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன், டயானா கமகேவின் குடியுரிமை தொடர்பான சகல ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

டயனா கமகே, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், சட்டமா அதிபர் உள்ளிட்ட 15 பேர் மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, பிரித்தானிய பிரஜை எனவும், பிரித்தானிய பிரஜை ஒருவரே பிரித்தானிய கடவுச்சீட்டை வைத்திருக்க முடியும் எனவும் மனுதாரர் கோரியுள்ளார்.

வேற்று நாட்டில் குடியுரிமை பெற்றதன் மூலம், பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே இலங்கை பிரஜாவுரிமையை இரத்துச் செய்துள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இரட்டைக் குடியுரிமை அல்லது வேறு எந்த வகை குடியுரிமையையும் டயானா கமகே பெறவில்லை என்றும் அவர் எம்.பி.யாகத் தெரிவு செய்யப்படுவதற்கும் அல்லது இலங்கையின் அரசியலமைப்பின் 89 மற்றும் 90ஆவது சரத்தின் 91ஆவது பிரிவின்படியும் பாராளுமன்றத்தில் அமர்ந்து வாக்களிப்பதற்கும் தகுதியற்றவர் என்று மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தீர்வை வழங்க காலம்...

சுமார் 20 இலட்ச இலங்கையர்கள் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். இவர்களிடமிருந்து முழுமையான பிரயோசனங்களைப் பெற்றுக்கொள்கிறோமா என்பதே இன்று எமக்குள்ள பிரச்சினை எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து எதிர்காலத்தில் வெளிநாடுகளில் வாழ் இலங்கையர்களுக்கான அலுவலகம் ஒன்றை அமைக்க எதிர்பார்க்கிறோம். அதுபோல, அண்மையில் கனடாவிலிருந்து புலம் பெயர் தமிழர்கள் இலங்கைக்கு வருகை தந்ததைப்போல, இங்கிலாந்திலிருந்தும் புலம் பெயர் தமிழர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர் எனவும் தெரிவித்தார். இவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் ஊடாக பொருளாதார ரீதியாக பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என நம்புகிறோம். நீண்டகால தீர்வுகளுக்கு செல்வதற்கான காலம் வந்துவிட்டது. எதிர்காலத்தில் ஏனைய அமைச்சுகளுடன் கலந்துரையாடி குறிப்பாக ஜனாதிபதி செயலகத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

## சீனாவுடன் புரிந்துணர்வு...

இலங்கை அரசாங்கத்தின் மறைமுக ஆதரவுடன் 2022 நவம்பர் 25 ஆம் திகதி கையொப்பமிட இரகசிய ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை ஊடகங்களில் அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் எங்களின் நிலத்தை அபகரிக்கும் சீனாவின் மறைமுக நிகழ்ச்சி நிரலை அறிந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு துணிச்சலாக மறுத்த யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவுக்கு நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

ஐ.நா சபையின் அறிக்கையின் பிரகாரம், இனவழிப்பு யுத்தத்தின் இறுதி ஆறு மாத காலப் பகுதியில் மட்டும் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதோடு நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்களும் சிறுமிகளும் ஸ்ரீ லங்கா ஆயுத படையினரால் பலாத்காரம் செய்யப்பட்டனர். குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

சீனா, அனைத்தையும் நன்றாக அறிந்திருந்தும் தமிழர்களை தொடர்ந்து அவமானப்படுத்துவதையும், சர்வதேச அரங்கில் தமிழர்களுக்கு நீதி கிடைக்காமல் தடுப்பதையும் வழக்கமாக கொண்டதுடன், போர்க்குற்றவாளிகளை ஆதரித்தும் இலங்கையை கடன் பொறியில் சிக்க வைத்து அச்சுறுத்தியும் இலங்கையை கைப்பற்றும் அதன் மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகிறது.

தமிழர் விரோத மனப்பான்மை கொண்ட சீனா, வடக்கிலும் கிழக்கிலும் தனது செல்வாக்கை அதிகரிக்கச் செல்லும் தீய நோக்கத்துடன் எமது கடலையும் நிலத்தையும் அபகரித்து எமது பாரம்பரிய மண்ணில் எம்மை அகதிகளாக்கி இனப்படுகொலை செய்யும் முயற்சிகளை நாம் ஏற்கெனவே கண்டித்திருந்தோம்.

தீங்கு விளைவிக்கும் கடலட்டை பண்ணைகள் என்ற போர்வையில் சீனா நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்கெனவே எமது கடலின் பெரும்பகுதியை ஆக்கிரமித்து, எமது மீனவர்களிடையே பிளவை உருவாக்கியுள்ளது.

தற்போது சீனா வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள வளமான விவசாய நிலங்களை, தமது நாட்டில் பத்து ஆண்டுகளில் ஏற்பட இருக்கும் மிக கடுமையான உணவு பஞ்சத்தை சமாளிக்கும் பொருட்டு தீய எண்ணத்துடன் கைப்பற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறது. சீனா, இலங்கைக்கு தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்களுடன் கூடிய மலக் கழிவுகளை உரமாக வழங்கியதாகவும், இலங்கைக்கு மில்லியன் கணக்கான ரூபாய்களை செலுத்துமாறு நிர்பந்தித்ததாகவும் கூறப்படுகிறது. சீனாவில் வரவிருக்கும் உணவு நெருக்கடியை சமாளிக்க எமது வளமான விவசாய நிலங்களை சீனா எப்படி கைப்பற்றி எம்மை அடிமையாக்கும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

வெளிப்படைத்தன்மையற்ற மற்றும் சாத்தியமற்ற சீனக் கடன்கள் மூலம் இலங்கை தற்போதைய நிலைமைக்கு வந்துள்ளது என்பது தெளிவாகிறது. இலங்கையின் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களுக்கு ஜப்பானும், இந்தியாவும் ஆதரவளித்துள்ள போதிலும், கடன்களை பரிசீலிக்கும் தற்போதைய பேச்சு வார்த்தைகளில் கூட சீனாவின் மறுநிதியளிப்பு திட்டத்தில் தொடர்ந்து இருந்து வருவது, இலங்கையில் மீண்டும் பேரழிவை ஏற்படுத்தும் சீனாவின் மறைமுக நிகழ்ச்சி நிரல் இலங்கையின் சமீபத்திய வரலாற்றிலிருந்து தெளிவாகக் அறிய முடிகிறது.

சீனாவின் அணுகுமுறையின் அடிப்படையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வளமான விவசாய நிலங்களையும் கடற்பரப்பையும் சீனாவுக்கு விற்பதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்கனவே சீனாவுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டதாக நாங்கள் சந்தேகிக்கிறோம். எமது நிலங்களையும் கடலையும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக சீனாவிற்கு விற்க பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அரசாங்கம் செய்து வருகிறது.

அரசியல் நிர்ப்பந்தத்திற்காக எமது நிலத்தையும் கடலையும் வேறு நாடுகளுக்கு விற்க வேண்டாம் என இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதுடன், நமது கடலையும், நிலத்தையும் காப்பாற்ற குரல் கொடுக்குமாறு சிவில் சமூகங்கள் மற்றும் அனைத்து மக்களிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இந்த கடமையிலிருந்து தவறுகின்ற பட்சத்தில், எதிர்காலத்தில் நாம் அனைவரும் எம்முடைய சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்படுவோம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 21/4 சந்தேக நபர்...

தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு, நீதமன்ற உத்தரவின் பிரகாரம் பிணையில் விடுவிக்கப்பட்டவர் ஆவார்.

மட்டக்குளிய ஸஃபியா ஒழுங்கையில் வசிக்கும் மொஹமட் பதுர்தீன் மொஹமட் ஹரிநாஸ் (வயது 38) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாக மட்டக்குளிய பொலிஸார் தெரிவித்தனர்.

## நீங்கள் இலங்கையின்...

பல தசாப்தங்களுக்கு முன்னர் ஒருவெலயில் இரும்புத் தொழிற்சாலையையும் களனியில் டயர் தொழிற்சாலையையும் நிறுவி இலங்கையின் கைத்தொழில் மயமாக்கலுக்கு சோவியத் வழங்கிய ஆதரவை பிரதமர் இதன்போது நினைவு கூர்ந்தார். தற்போது தேசத்திற்கு சேவையாற்றும் நூற்றுக்கணக்கான இலங்கை மாணவர்களுக்கு லுமும்பா மற்றும் மொஸ்கோ பல்கலைக்கழகங்களில் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்கள் பற்றியும் பிரதமர் குறிப்பிட்டார்.

அனைத்து துறைகளிலும் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு ரஷ்யா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என தூதுவர் பிரதமரிடம் உறுதியளித்தார். இலங்கையில் பாரியளவிலான ரஷ்ய முதலீடுகளுக்கான வாய்ப்புகள் குறித்தும் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## செலவுகள்...

அதற்கமைய, அமைச்சுகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள், அரச தொழில்முயற்சியான்மை, மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச வங்கிகள், கடமைகளை பொறுப்பேற்றல் மற்றும் ஓய்வூ பெறுவதுடன் தொடர்புடைய நிகழ்வுகள், சினேகபூர்வ சந்திப்புகள், கொண்டாட்டங்கள் உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகளுக்கும் அரச நிறுவனங்களூடாக ஈட்டப்படும் நிதியை செலவிடுகின்றமை நிறுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையை...

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸவால் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய விமல் வீரவன்ச கூறியவை வருமாறு,

இலங்கை பொருளாதார ரீதியில் பலமிழந்துள்ளது. இதனை வைத்து பலம்பொருந்திய நாடுகள் இலங்கையின் கழுத்தை இறுக்கி பிடிக்க முற்படுகின்றன. தமது உபாயத்துக்குள் இலங்கையை கொண்டுவருவதற்கு கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றன. தமது நாட்டு ரூபாவை இலங்கையில் செயற்படுத்துவதற்கு இந்தியா முயற்சிக்கின்றது. அவ்வாறு நடந்தால் இலங்கை இந்தியாவின் மாநிலமாக மாறக்கூடிய சூழ்நிலைமை தானாகவே உருவாகிவிடும்.

மறுபுறத்தில் நாட்டில் போராட்டங்களை தூண்டிவிட்டு, அராஜக நிலைமையொன்றை உருவாக்குவதற்கு மேற்குலக நாடுகள் திட்டம் தீட்டுகின்றன. ‘ஹெட்டி’யில் போன்று இலங்கையிலும் ஆட்சி கட்டமைப்பு இல்லாத நிலைமையை தோற்றுவித்து, நாட்டை சீரழிக்க முற்படுகின்றன. இதற்காக ‘என்ஜீஓ’ காரர்கள் தூண்டிவிடப்படுகின்றனர். ஆசிரியர்களுக்கான ஆடையில் மாற்றம் வேண்டும் எனக் கூறுவது இந்த நிகழ்ச்சி நிரலின் ஓர் அங்கமாகும் என்றார்.

## இலங்கைக்கு மருந்துப்...

இந்த நிகழ்வில், வியட்நாம் தூதுவர் ஹோதாய் தான் ட்ரக் (Ho thi thanh truc) அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி, பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமண வீரசிங்க, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஜி. வீரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்

# இரு தேசங்களையும் கட்டியெழுப்புவோம்

பா.நிரோஸ்

நீங்கள் நீங்களாகவும், நாங்கள் நாங்களாகவும் இரு தேசங்களையும் கட்டியெழுப்புவதற்கான ஒரு செயற்பாட்டை முன்னெடுப்போம். அதனைத் தான் நாம் தொடர்ந்து கூறிவருகிறோம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

தொடர்ந்து வெறுமனே பேசிகொண்டிருக்காது, வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். மாவீரர் நினைவேந்தல் பெரியளவில் எந்த விதமான எதிர்ப்புகளையும் வழங்காது அனுமதியளித்த ஜனாதிபதிக்கு நன்றிகளை தெரிவித்துகொள்கிறேன். நாட்டில் இதுபோன்ற புரிதல் மெல்ல மெல்ல ஏற்படுவது வரவேற்கத்தக்கது. இந்த புரிதல் இன்னும் வளர வேண்டும் எனவும் தெரிவித்தார். சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகளை யுத்தக்காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டது போல இப்போதும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அப்போதே பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும்.

ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் காலத்தில் 50இக்கு 50இக்கு கேட்டதிலிருந்து, பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வ ஒப்பந்தம், பிரேமதாஸவின் காலத்தில் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர் குழு, சந்திரிக்காவின் தீர்வுத் திட்டம், ரணில் பிரபா ஒப்பந்தம் என அனைத்தும் நடந்து எதனையும் நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் யுத்தம் நடைபெற்று தமிழ் மக்களின் இரத்தமும் வியர்வையும் அழிந்துபோன இத்தேசத்தில் பீனிக்ஸ் பறவைபோல அவர்கள் தங்களது வாழ்க்கையை ஆரம்பிக்கிறபோதிலும் அவர்கள் மீதான கொடுமைகளும், அடக்குமுறைகளும் குறைந்தபாடில்லை எனவும் தெரிவித்தார்.


# கோட்டாவும் தவறிவிட்டார்

பா.நிரோஸ்

இலங்கை இராணுவ வீரர்கள் குற்றமற்றவர்கள் என நிரூபிக்க சர்வதேச நிபுணர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மெக்ஸ்வெல் பரணகம அறிக்கையை ஐ.நாவில் சமர்ப்பிக்காதது ஏன் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் கேள்வி எழுப்பினார்.

ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பில் இன்று சபையில் பேசப்பட்டது. 6 நிபுணர்களைக் கொண்ட மெக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழுவை மஹிந்த ராஜபக்ஷ அமைத்திருந்தார். இந்த ஆணைக்குழுவில் இலங்கை எந்தவிதமான குற்றங்களையும் செய்யவில்லை என்பதற்கான பதில் இருக்கிறது. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அமரர்மங்கல சமரவீர இலங்கை மீதான மனித உரிமை மீறல் தொடர்பான பிரேரணையை ஏற்றுக்கொள்வதற்கு முன்னராக இலங்கை குற்றவாளியில்லை என்பதை நிரூபிப்பதற்கான வாய்ப்புகள் அவருக்கு இருந்தது எனவும் தெரிவித்தார்.

துரதிஸ்டவசமாக கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கமும் கூட அதனை செய்யவில்லை. தற்போதைய அரசாங்கம் அதனை செய்யும் என்கிற நம்பிக்கையில்லை. இலங்கை குற்றவாளியில்லை என்பதை நிரூபிப்பதற்கான வாய்ப்பு



தவறவிடப்பட்டுள்ளது என்றார்.

இலங்கை இராணுவ வீரர்கள் குற்றமற்றவர்கள் என்பதை ஜெனிவாவுக்கு நிரூபிப்பதற்கு 6 சர்வதேச நிபுணர்களை கொண்டு தயாரிக்கப்பட்ட பரணகம அறிக்கையை ஏன் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கவில்லை. ஆணைக்குழுவுக்கு சென்று ஆக்கிரோசமான உரைகளை ஆற்றுவதால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

பூகோள ரீதியாக முக்கியமான இடத்தில் எமது நாடு இருப்பதால் நடுநிலைமையான வெளிநாட்டுக் கொள்கைகளை பின்பற்ற வேண்டுமென கூறுகிறார்கள். எது நடந்தாலும்

வாயைமூடிக்கொண்டிருக்க கூடிய கொள்கையே நடுநிலைமையான கொள்கை. நடுநிலைமையான கொள்கையைப் பின்பற்றி சர்வதேச நாடுகளின் இறுப்பு பாதணிகளுக்கு அடிபணியக்கூடாது எனவும் தெரிவித்தார்.

# சோடித்த கதைகளை வைத்து ஏமாற்றினர்

பா.நிரோஸ்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக் காலத்தில் உலக நாடுகளைப் பகைத்துகொண்டதுபோல பேசுகிறார்கள். இது உண்மையில் சோடிக்கப்பட்ட கதை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிராக நாடு மேற்கொண்ட பயணத்தின்போது உலக நாடுகள் சிலவற்றிடமிருந்து வந்த கோரிக்கைகள் சில நியாயமற்றவை என்பதை அனைவரும் அறிவார்கள்.

அமெரிக்காவில் செப்டெம்பர் 11ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் அந்நாட்டு ஜனாதிபதி, பயங்கரவாதத்துக்கு எதிரான பொதுவான பதிலை வழங்குவோம் என அனைத்து உலக நாடுகளுக்கும் ஆலோசனை வழங்கினார். ஆனால், நடைமுறையில் இது சாத்தியமற்றதாகிப்போனது. ஆப்கானிஸ்தானிலிருந்து பாக்கிஸ்தான் வரையில் தாக்குதல்களை மேற்கொண்டே அமெரிக்கா தனது நாட்டில் தாக்குதலை மேற்கொண்டவர்களை கண்டறிந்தது எனவும் தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி நாட்டு மக்களைப் பாதுகாக்க மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு உலகில் பல்வேறு இடங்களில் இருந்து பிரச்சினைகள் வந்தன. இது தவறாக சிலருக்கு தோன்றலாம், ஆனால் அன்று மஹிந்த ராஜபக்ஷ அவ்வாறு செய்யவில்லை என்றால் புலிகளின் தாக்குதலுக்கு இன்றும் முகங்கொடுக்க நேரிட்டிருக்கும் எனவும் தெரிவித்தார்.





பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

## இனப் பிரச்சினைக்கு

# இந்த அரசாங்கத்தில் தீர்வா? எவரும் நம்புவார்களா?



இனப் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கு பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருந்த அனைத்து அரசாங்கங்களும் எடுத்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிவடைந்ததாக தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இவ்வாறான நிலையில் இனப் பிரச்சினையை தீர்க்கப்போவதாக தற்போதைய அரசாங்கம் கூறுவதை எவராலும் நம்ப முடியுமா எனவும் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பின் ஊடாக இனப் பிரச்சினைக்கு தீர்வை வழங்கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. குறிப்பாக அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வை வழங்கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. நாட்டில் 6இல் 5 பெரும்பான்மையைக் கொண்ட அரசாங்கம் இருந்திருக்கிறது. மூன்றிலிரண்டு பெரும்பான்மைக் கொண்ட அரசாங்கம் இருந்திருக்கிறது. இந்த அரசாங்கங்கள் எல்லாம் இனப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டன. ஆனால் அந்த அனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்தன எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடியும் என எவராலும் நம்ப முடியுமா? உலகில் உள்ள எவரும் அரசாங்கத்தின் இந்த அறிவிப்பை கருத்திற்கொள்வார்களா என நான் கேட்க விரும்புகிறேன். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கப்போவதாக அரசாங்கம் கூறுகிறது. தென்னாப்பிரிக்காவில் உள்ளதுபோல உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவையா அமைக்கப்போகிறீர்கள். இந்த ஆணைக்குழு ஆளமான விசாரணைகளை மேற்கொண்டது.

கொலை, கொடூரமான குற்றச்செயல்களை செய்தவர்கள் தொடர்பில் இந்த ஆணைக்குழு விசாரணைகளை செய்தது. இதில் குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. இதனையா நாமும் செய்யப்போகிறோம் எனவும் கேள்வி எழுப்பினார்.

## கிழக்கு கிழக்காகவே இருக்கக்கூடிய

# 13 பிளஸ்ஸுக்கு இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும்



இனப் பிரச்சினைக்கு தீர்வு அதிகாரப் பகிர்வு என கூறிக்கொண்டிருக்கும் போது, அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்ட மாகாணசபைகளே கைநழுவிச் செல்லும் சூழலில், கிழக்கு மாகாணம் கிழக்கு மாகாணமாகவே இருக்கக்கூடிய வகையில் 13 பிளஸ் தொடர்பில் அனைவரும் இணக்கப்பாடொன்றுக்கு வரவேண்டுமென இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவது தொடர்பில் வடக்கு, கிழக்கில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்க எதிர்க்கட்சி, ஆளுங்கட்சியினர், மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் தினேஸ் குணவர்தன ஆகியோர் தயாராக இருக்கிறார்களா? என ஜனாதிபதி ரணில் பலரிடமும் கேள்வி எழுப்பி உரையாற்றியிருந்தார். நாட்டுக்கு உரிய தீர்வை வழங்க ஜனாதிபதி முயற்சிக்கிறார். வரவு செலவு திட்டம் நிறைவடைந்த பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கிழக்கு மாகாண பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்களை மேற்கொள்ள உள்ளார். இதனை வரவேற்க வேண்டும். இதற்கு தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என்றார்.

தமிழ் அரசியற் கட்சிகளிடம் ஒற்றுமையொன்று இல்லை என பேசப்பட்டு வந்த நிலையில், தமிழரசுக் கட்சி அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தது. அக்கலந்துரையாடல்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் வெளிப்படைத்தன்மை இல்லை. இதேவேளை தமிழர்களுக்கு என்ன தீர்வு? முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியதுபோல 13 பிளஸில் இருந்து ஆரம்பிக்கப்போகிறோமா? அதில் எமக்குள்ளே ஒற்றுமைகள் ஏற்பட்டுள்ளதா? வைரமுத்து கூறியதுபோல பட்டு வேட்டிக் கனவில் இருந்தபோது கோவணமும் களவாடப்பட்டதுபோல கூட்டமைப்பும் அதிகாரப் பகிர்வு என கூறிக்கொண்டிருக்க அரசியலமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாணசபைகளும் தேர்தலை நடத்தாது கைநழுவி சென்று கொண்டிருக்கிறது எனவும் தெரிவித்தார்.

# ரணிலும் இந்திய ஜனாதிபதியை போன்றவரே



இந்திய ஜனாதிபதியை எவ்வாறு மக்கள் தெரிவு செய்வதில்லையோ அதேபோல் தான் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் ஜனாதிபதியாக மக்கள் தெரிவு செய்யவில்லை என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய ஜனாதிபதிக்கு ஒப்பானவர். இந்திய ஜனாதிபதியையும் மக்கள் தெரிவு செய்வதில்லை. அதேபோல் ரணிலையும் மக்கள் தெரிவு செய்யவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களே ரணிலை தெரிவு செய்தனர். ஆனால், தன்னை மக்கள் தெரிவு செய்ததாக ரணில் நினைத்துகொண்டிருக்கிறார் எனவும் கூறினார்.

ஹிட்லர் என தன்னை அடையாளப்படுத்த ஊடகங்களை அச்சுறுத்தல் விடுத்துள்ளார். ஊடகங்களை அச்சுறுத்தி எந்தவொரு நெருக்கடி நிலைமகளையும் தீர்க்க முடியாது எனவும் கூறினார். நாட்டின் வெளிவிவகார கொள்கைகள் தொடர்ந்து திருத்தப்பட்டு வருகிறது. அதனால் இலங்கையில் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் உறுதியற்ற நிலையொன்று ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் அப்போதைய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் நாட்டின் வெளிநாட்டுக் கொள்கைகளை மறுசீரமைத்தார் எனவும் கூறினார்.

## அரச, தனியார் துறையினரை ஒன்றிணைத்து

# அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை



கட்டட நிர்மாணத்துறையில் வேலைகள் நிறுத்தப்படுவதால் பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு தொழில் இல்லாமல் போகும் பின்னணியில் அரச மற்றும் தனியார் துறையினரை ஒன்றிணைத்து எதிர்கால அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானித்திருப்பதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சரின் தலைமையில் பாராளுமன்றத்தில் கூடிய போது, நகர அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வினவிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அபிவிருத்திப் பணிகளுக்குச் செலவு செய்வதற்கு விரும்பும் தனியார் முதலீட்டாளர்கள் காணப்படுவதால், அதற்கு திறைசேரியினால் நிதி ஒதுக்கீடு செய்யாமல் அரச மற்றம் தனியார் துறையினரை ஒன்றிணைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

உரிய திட்டங்களை மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களுக்கும் முன்வைத்து அவர்களது தேவைகளையும் கருத்திற் கொண்டு பூர்த்தி செய்யுமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

# இனவாதமும் மதவாதமுமே நாட்டை நாசம் செய்தது

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க அரசியல் அடித்தளமாக அமைந்த இனவாதமும், மதவாதமுமே நாட்டை நாசம் செய்ததாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு மதவாதமும், இனவாதமும் அரசியல் அடித்தளமாக அமைந்தது. இந்த அரசியல் அடித்தளத்தால் நாடு மோசமான வெளிநாட்டுக்கொள்கைக்குள் சென்றுள்ளது. யுத்தக் குற்றச்சாட்டுக்கள் மட்டுமல்லாது பொருளாதார ரீதியாகவும் நாட்டை நாசமடைய செய்துள்ளதாக இலங்கை தொடர்பில் சர்வதேச மட்டத்தில் குற்றஞ்சுமத்திப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கிய ஏனைய ஆசிய நாடுகள், முஸ்லிம் நாடுகள் கடந்த அமர்வில் இலங்கைக்கு ஆதரவாக நிற்கவில்லை. கருத்தடைக் கொத்து, கருத்தடை உள்ளாடை போன்ற முட்டாள்தனமான காரணங்களே சர்வதேசத்தில் இலங்கைக்கு ஏற்பட்ட நிலைக்குக் காரணம். கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அப்போதிருந்த அரசாங்கம் எரித்தது. தங்களது வாக்கு வங்கியை பாதுகாத்துக்கொள்ளவே கடந்த அரசாங்கம் இவ்வாறு செயற்பட்டது. மக்களிடம் வெறுப்புகளை தூண்டி நாட்டின் பொருளாதாரத்தை அந்த அரசாங்கம் நாசம் செய்தது. மேலும், இவர்களால் உருவாக்கப்பட்ட மோசமான தலைவரான கோட்டாவுக்கு நாட்டிலிருந்து தப்பியோடும் நிலை ஏற்பட்டது எனவும் தெரிவித்தார்.

புலி எனவும் மத்திய வங்கியின் கொள்ளையர் எனவும் நீங்கள் விமர்சித்த ரணிலே உங்கள் அனைவரையும் பாதுகாக்கும் நிலை ஏற்பட்டது. அரசியல், ஜனநாயகம், இன, மதவாதம் இல்லாது நாட்டில் உள்ள அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்துகொண்டு பயணிப்பதற்கான அரசியலை செய்தால், நாட்டுக்குப் புதிய வெளிநாட்டுக்குக் கொள்கைகளை உருவாக்க வேண்டிய நிலை ஏற்படாது எனவும் தெரிவித்தார்.

## கையடக்க தொலைபேசி

# டேட்டா கட்டணங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்



கையடக்க தொலைபேசி மற்றும் டேட்டா கட்டணங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென எதிர்க்கட்சி உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார். தொலைபேசி மற்றும் டேட்டா கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமை மக்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார். பலர் தொலைக்காட்சி பார்க்க, இசை கேட்க, சமூக ஊடகங்களைப் பயன்படுத்த மற்றும் கல்வி கற்கும் நடவடிக்கைகளுக்கும் பெரும்பாலும் கையடக்க தொலைபேசி மற்றும் டேட்டாவை பயன்படுத்து கின்றார்கள். இது சமீப காலமாக தெளிவாகத் தெரிகிறது.

தொலைபேசி கட்டணங்கள் மற்றும் டேட்டா கட்டணங்கள் மிகவும் அதிகரித்துள்ளது. இதனால் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். தொலைபேசிக் கட்டணங்கள் மற்றும் டேட்டா கட்டணங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கத்தின் கவனத்தை செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.

## மன்னார் மாவட்டத்திலும்

# ரயில் பயணங்களை விஸ்தரிக்க வேண்டும்



யாழ்ப்பாணத்தில் புதிய ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கு நன்றிகள். இதுபோல மன்னார் மாவட்டத்திலும் ரயில் பயணங்களை விஸ்தரிக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களும் ரயில் போக்குவரத்தையே தற்போது பயன்படுத்துகிறார்கள். எனவே இதனை விஸ்தரிக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் போக்குவரத்து கேள்விக்குறியாகவே உள்ளது. வன்னி மட்டத்தில் இ.போ.ச தொடர்பில் பேசும்போது பஸ்கள், டயர்கள், உதிரிப்பாகங்கள் இல்லை எனக் கூறிவருகிறார்கள். இதனால் பாடசாலை மாணவர்கள், வயதானவர்கள் பல கிலோமீற்றர் தூரம் நடக்கும் நிலையே ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே வாழ்கிறார்கள். அவர்களுக்கு வங்கிக் கடன்கள் வழங்கப்படுவதில்லை. மேலும், ஊடகவியலாளர்களுக்கான நிரந்தர கொடுப்பனவுகள் கிடைப்பதில்லை.

எனவே அரசாங்கம் கரினைக்காட்டி, ஊடகவியலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊடகவியலாளர்களுக்கான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படுவதில்லை எனவும் கூறினார். இதற்குப் பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, இது தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதாகவும், எவ்வாறாயினும் மகோவிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் போக்குவரத்துப் புனரமைப்பு பணிகளுக்காக 5 மாதங்கள் ரயில் சேவைகள்

இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதன்படி, ஜனவரி 15ஆம் திகதியிலிருந்து 5 மாதங்களுக்கு ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட உள்ளன. 5 மாதங்கள் ரயில் பாதைகளை சரி செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு செய்யும் பட்சத்தில் மன்னார், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள ரயில் பாதைகளை சிறந்த ரயில் பாதைகளாக அடுத்த வருடத்தில் மாற்றுவோம் எனவும் தெரிவித்தார்

யாழ்ப்பாண டிப்போ

# இ.போ.ச ஊழியர்கள் திடீர் பகிஷ்கரிப்பு

என்.ராஜ், எம்.றொசாந்த்

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்ப்பாண டிப்போ சாரதியை தாக்கியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி, ஊழியர்களால் நேற்று (28) திடீர் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த புதன்கிழமையன்று, இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ், யாழ்ப்பாணம் வசாவிளான் பகுதியில் வைத்து மோதியதில் மாணவனொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து சம்பவத்தின் போது , இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சாரதி மீது அங்கிருந்த சிலர் தாக்குதலை மேற்கொண்டமையால், காயமடைந்த சாரதி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாரதி மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், ஏனைய தாக்குதலாளிகளையும் பொலிஸார் கைது செய்ய வேண்டும் எனவும் , தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரியே ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.




யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தினுள் பஸ்களை நுழைய விடாது தடுப்புக்களை போட்டுள்ளமையால், வெளி மாவட்ட பஸ்கள், பஸ் நிலையத்தினுள் நுழைய முடியாமல் வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. “எமக்கு பாதுகாப்பு வேண்டும்”, “நிர்வாகமே எமது உயிருக்கு யார் உத்தரவாதம்”, “தனியார் பேருந்து குழுவின் அராஜகம் ஒழிக” உள்ளிட்ட சுலோகங்கள் அடங்கிய அட்டைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

திடீரென இன்றைய தினம் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமையால் , தூர இடங்களுக்கு வேலைக்கு செல்வோர், பொதுமக்கள் என பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

# அஞ்சலி செலுத்த வந்தோரை வீடியோ எடுத்த இராணுவம்

## அச்சுறுத்தலை மீறி அஞ்சலி



எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம் வடமாராட்சி எள்ளாங்குளம் துயிலும் இல்லம் முன்பாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த வருவோரை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஈடுபட்டனர்.

மாவீரர் நாளான ஞாயிற்றுக்கிழமை (27) எள்ளாங்குளம் துயிலும் இல்லம் முன்பாக மாவீரர்களுக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதன்போது இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் மற்றும் அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் அங்கு வருவோரை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

அதேவேளை ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்ட போதும், அச்சுறுத்தல்களை மீறி அங்கு உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

வழக்கம்போல் மாலை 6 மணி 5 நிமிடத்திற்கு மணி ஒலிக்க பிரதான ஈகை சுடரினை மேஜர் சோதியா (சோதியா படையணி) அவர்களுடையt தாயார் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர்களுக்கான பாடல் ஈகையோருக்கான ஈகை சுடர்கள் எற்றப்பட்டு கண்ணீர மல்க பூக்கள் சொரிந்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தினை இடித்து அழித்த இராணுவத்தினர் தற்போது அவ்விடத்தில், 551ஆவது படைப்பிரிவின் முகாமை அமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மன்னார் மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தல்



எஸ்.லம்பேட்

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டி வெளி மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லங்களில், ஞாயிற்றுக்கிழமை (27) மாலை நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மன்னாரில் உள்ள மாவீரர் இல்லங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

தமிழர் தாயகத்திற்கு உயிர் நீத்த உறவுகளை நினைவு கூறும் வகையில் கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி மாவீரர் தினம் வருடா வருடம் நினைவு கூரப்பட்டு வருகிறது.

அதற்கு அமைவாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் தின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (27) மாலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மேலும் மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் இடம் பெற்றதுடன், பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையிலான தமிழரசுக்கட்சியின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



பொன்னாலையில்

# காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கு கலந்துரையாடல்

எம்.றொசாந்த்

பொன்னாலையில் வரையறுக்கப்பட்ட முசல்பெற்றி வின்ட் பவர் (Musalpetti Wind Powr (PVT) Ltd) நிறுவனத்தினரால் காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல், வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நேறறு (28) நடைபெற்றது.

பொன்னாலை தொடக்கம் அராலி வரையான கடற்கரையோரத்தில் 15 காற்றாலைக் கோபுரங்களை அமைப்பதற்கு மேற்படி நிறுவனத்தினால் இடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இக்கோபுரங்களை அமைப்பதில் உள்ள சாதக, பாதக அம்சங்கள் தொடர்பாக சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு தெளிவூட்டுவதற்காக இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இதில் கலந்துகொண்டிருந்த துறைசார்ந்த அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் இக்கோபுரங்களின் சாதக, பாதக அம்சங்கள் தொடர்பாக கேள்விகளை எழுப்பிய போது, குறித்த நிறுவன உத்தியோகத்தர்கள் அதற்குரிய பதில்களை வழங்கினர்.

இதன்போது, இடத்தெரிவு தொடர்பாக கிராம மட்டத்தில் பொதுமக்களுடன் கலந்துரையாடி இறுதி முடிவு எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத திட்டங்களாயின் அதனை செயற்படுத்த முடியும் என இங்கு கலந்துகொண்ட மக்கள் பிரதிநிதிகளும் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# பொத்துவிலுக்கு தனியான கல்வி வலயம் வழங்கப்படும்

எம்.எஸ்.எம். ஹனீபா



பொத்துவிலுக்கு தனியான கல்வி வலயம் வழங்கப்படுமென்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வாக்குறுதியளித்துள்ளதாக, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப், நேற்று (28) தெரிவித்தார்.

பொத்துவில் கல்வி வலயம் எந்தெந்த கொத்தணி அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்பது உறுதி செய்யப்பட்டு, எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் புதிய கல்வி வலயமாக பொத்துவில் கல்வி வலயம் உருவாக்கப்படுமென தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் புதிய கல்வி வலயங்களை உருவாக்குவது தொடர்பான கூட்டம் கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இதில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொத்துவிலுக்கான தனியான கவ்வி வலயத்தின் தேவை குறித்து முன்வைத்த கோரிக்கைக்கமைய அது தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு பொத்துவிலுக்கான தனியான வலயம் உருவாக்குவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். நீண்ட காலமாக விடுக்கப்பட்டு வந்த இக் கோரிக்கையை நிறைவேற்றி பொத்துவிலுக்கு தனியான கல்வி வலயம் வழங்குவதற்கு வாக்குறுதியளித்துள்ள கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கு பொத்துவில் மக்கள் சார்பாக பாராட்டு தெரிவித்துள்ளதாக மேலும் தெரிவித்தார்.



# கிரானில் நடந்த விபத்தில் ஒருவர் பலி; 5 பேர் காயம்

பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு - கிரான் பிரதான வீதியில் ஞாயிற்றுக்கிழமை (27) காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், ஐவர் காயமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்

முறக்கொட்டன்சேனை தேவபுரப் பகுதியைச் சேர்ந்த நல்லராசா நேசராசா (வயது 46) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

கரைவலை மீன்பிடிக்கு பயன்படுத்தப்படும் உழவு இயந்திரத்தில் முறக்கொட்டான்சேனை பகுதியில் இருந்து கிரான் நாகவத்தை கடற்கரைப் பகுதிக்கு மீன்பிடிப்பதற்காக ஐவர் உழவு இயந்திரத்தில் சென்றுள்ளனர்.

இதன்போது, பிரதான வீதியில் இருந்து குறுக்கு வீதிக்கு உழவு இயந்திரத்தை திருப்பும் போது பின்னால் வந்த கார் உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

உழவு இயந்திரத்தில் இருந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், கார் சாரதி மற்றும் உழவு இயந்திரத்தில் இருந்த நான்கு பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காரில் பயணம் செய்தோர் களுதாவளை ஆலயத்துக்கு பூஜை ஒன்றுக்காக வந்துள்ளனர் என தெரியவருகிறது.

காரின் சாரதி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையிலும் ஏனையவ இருவர் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருவதுடன், மேலும் இருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்த சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பரிசோதனையின் பின்னர் உறவினர்கள் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# 1,444 ஏக்கருக்கான யூரியா காரைதீவில் விநியோகம்

காரைதீவு கமநல பிரதேசத்துக்குட்பட்ட 1,444 ஏக்கருக்கான யூரியா பசளை, காரைதீவு பிரதேச கமநல சேவைகள் நிலைய பொறுப்பதிகாரி மார்க்கண்டு சிதம்பரநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் விநியோகம் செய்யப்பட்டது.

நிகழ்வில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் மற்றும் விவசாய உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு பசளையை வழங்கி வைத்தனர்.

இதன்போது சத்துட்ட கொம்போஸ் பசளையும், திரவ கொம்போஸ் பசளையும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி வைக்கப்பட்டதுடன், யூரியா பசளை ஏக்கர் ஒன்றுக்கு 63 கிலோ கிராம் வீதம் வழங்கப்பட்டது.

50 கிலோ கிராம் யூரியா பசளை மூடையொன்றின் விலை 10 ஆயிரம் ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் மாவீரர் நினைவேந்தல்



வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை மாவடிமுன்மாரி துயிலும் இல்லம், தாண்டியடி துயிலுமில்லம், தரவை துயிலுமில்லம், வாகரை கண்டலடி துயிலுமில்லங்களில், தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை தியாகம் செய்த போராளிகளை நினைவுகூரும் மாவீரர் தின நினைவேந்தல் நேற்றையதினம் (28) உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை மாவடிமுன்மாரி துயிலுமில்லத்தில் பெருமளவான மாவீரர்களின் உறவுகள் முன்னிலையில் மாவீரர் தின நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

இதன்போது மாலை 6.05மணிக்கு ஈகச்சுடரேற்றப்பட்டு மணி ஒலிக்கப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

பலாலி விமானப்படை தாக்குதலில் வீரகாவியமான கரும்புலி மேயர் ஜீவரஞ்சனின் தாயார் பொதுச்சுடர் ஏற்றினார்.

மாவீரர்களின் பெற்றோர், உறவுகள் இதன்போது கண்ணீர்மல்க விளக்கேற்றி மலரஞ்சலி செலுத்தி தமது உறவுகளுக்கு வணக்கம் செலுத்தினர்.

# கஞ்சிகுடிச்சாற்றில் மக்கள் வெள்ளம்



வி.ரி. சகாதேவராஜா

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வு பூர்வமாக பேரெழிச்சியுடன் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை (27) மாலை இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட மாவீரர் பணிக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவீரர் தின நிகழ்வில் சுமார் மூவாயிரம் மக்கள் கண்ணீர் மல்க கலந்து கொண்டனர். அரசியல் பிரமுகர்கள் முப்படையினர் புலனாய்வு பிரிவினர் என பலதரப்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த பல வருடங்களுக்கு(2009) பிற்பாடு இம்முறை அதிகளவான மக்களோடு மிகவும் உணர்ச்சி பொங்க மாவீரர் தின நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டம் எங்கும் இருந்து பஸ்களிலும் ட்ரக்டர்களிலும் வான்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் மக்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். பெருந்திரளான இளைஞர்களும் வந்திருந்தனர்.

மாலையில் ஆறு ஐந்துக்கு மாவீரர் பணிக்குழுத் தலைவர் குட்டிமணி மாஸ்டர் தலைமையில் மாவீரர் லெப்டினன்ட் கேணல் தாஸின் தாயார் பிரதான ஈகைச்சுடர் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து 856 வித்துடல்களுக்கு முன்னால் அமர்ந்து கதறி அழுத வண்ணம் மாவீரர்களின் பெற்றோர்கள் சுடரேற்றினார்கள். தொடர்ந்து அகவணக்கம் மாவீரர் தின பாடல் ஒலிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் ,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பொத்துவில் பிரதேச சபையின் உபதவிசாளர் பெருமாள் பார்த்திபன், கல்முனை மாநகர சபை உறுப்பினர் கே. சிவலிங்கம், முன்னாள் உறுப்பினர் எஸ் ஜெயக்குமார் ,மாணவர் மீட்புப்குழு தலைவர் செல்வராஜா கணேஷ், பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர்களான த.சுபோதரன் , ந.சசிதரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# “இராதா நிரூபித்தால் பதவி விலக தயார்”

எஸ்.கணேசன்

“கொட்டகலை பிரதேச சபையில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான இராதாகிருஷ்ணன், பாராளுன்றத்தில் தெரிவித்த கருத்து அப்பட்டமான பொய்யாகும். அந்த சபையில் ஊழல் இடம்பெற்றுள்ளது என்பதை நிரூபித்தால் பதவி விலக தயார்.” என கொட்டகலை பிரதேச சபையின் தவிசாளர் இராஜமணி பிரசாந்த் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம், நுவரெலியா பிரதேச செயலக மண்டபத்தில் அதன் தலைவரும், இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (28) நடைபெற்றது.

இதன்போது, கொட்டகலை பிரதேச சபை தொடர்பில், அதியுயர் சபையான பாராளுமன்றத்தில் பொய்யான



கருத்துகளை பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் முன்வைத்துள்ளார் எனக்கூறி, அதற்கான ஆதாரங்களை தவிசாளர் இராஜமணி பிரசாந்த் முன்வைத்தார். விசேட விளக்கமொன்றையும் முன்வைத்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

“ கொட்டகலை பிரதேச சபைக்கு நகர அபிவிருத்தி சபை 3 ஏக்கர் காணி வழங்கியுள்ளது என இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். அது பொய். ஒரேயொரு ஏக்கர் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அது இலவசமாக வழங்கப்படவில்லை. அதற்கும் மாதாந்தம் நாம் கூலி செலுத்துகின்றோம்.

பிரதேசசபை தவிசாளராக இராதாகிருஷ்ணன் இருந்த காலத்தில்தான் ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. 18 குடியிருப்புகள் இருந்த பகுதியொன்றில் இலஞ்சம் வாங்கிக்கொண்டு, தனக்கு வேண்டப்பட்ட ஐவருக்கு மாத்திரமே உறுதிப்பத்திரம் பெற்றுக்கொடுத்துள்ளார் என்றார்.

அவர் இராஜாங்க அமைச்சராக இருந்துள்ளார். எனவே, பொறுப்புடன் கதைக்க வேண்டும், தகவல்களை வெளியிட வேண்டும். ஒரு சிலரை திருப்திபடுத்துவதற்காக பொய்யுரைக்ககூடாது. கொட்டகலை பிரதேச சபை, நுவரெலியா மாவட்டத்திலேயே சிறந்த பிரதேச சபை என்பதற்காக இரு தடவைகள் விருந்து வென்றுள்ளது. ஊழல் எதுவும் இடம்பெறவில்லை. அவ்வாறு இடம்பெற்றுள்ளது என நிரூபித்தால் பதவி விலக நான் தயார். முறைப்பாடுகளை முன்வைக்க இடங்கள் உள்ளன. அங்கு முறைப்பாடுகளை தெரிவிக்கலாம் என்றார்.

கடந்த காலத்தில் மலையக மக்கள் முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்திய நுவரெலியா பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சதாசிவனும், முன்னாள் செயலாளராக இருந்த பிரதீப் ஆகியோரும் நுவரெலியா பிரதேச சபையின் புதிய சபை கட்டடத்தை நிர்மாணிக்கும் பணியில் ஊழல் செய்துள்ளதாவும், அதற்கான ஆதரங்களும் தன்னிடம் உள்ளதாகவும் பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாந்த் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், எம்.பி. இராதாகிருஷ்ணன் மற்றும் தவிசாளர் ராஜமணி பிரசாந்த ஆகியோர் முன்வைத்துள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றை முன்வைக்குமாறு பிரதேச செயலாளருக்கு, குழுவின் தலைவர் ஜீவன் தொண்டமான் ஆலோசனை வழங்கினார்.

## கைவரிசை காட்டிய நால்வர் கைது



எம். செல்வராஜா

பசறைப் பகுதியில் வீட்டொன்றின் பின்புறமாக நுழைந்து, களவெடுத்த நால்வர் களவாடிய பொருட்களுடன், பசறைப் பொலிஸாரினால் ஞாயிற்றுக்கிழமை 927) மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பசறை மவுசாகலை எனுமிடத்தில் வீடொன்றின் பின்புறமாக நுழைந்து எல். ஈ. டீ தொலைக்காட்சி, மின் அரைப்பான், முற்கால சில்லறை நாணயங்கள், பித்தளை கம்பிகள், பெருமளவிலான மின் இயந்திரங்கள் உள்ளிட்ட சுமார் ஆறு இலட்சம் பெறுமதியான பொருட்களே திருடப்பட்டுள்ளன.

பசறைப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து களவாடப்பட்ட பொருட்களுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## குப்பைகளைக் கொட்டிய ஊழியர் இருவர் பணிநீக்கம்

சுதத் எச்.எம். ஹேவா

ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு அப்பால், குப்பைகளைக் கொட்டிய குற்றச்சாட்டின் கீழ், அந்த நகர சபையின் பணியாளர்கள் இருவர், பணியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலேந்திரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர்,

ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் சேகரிக்கப்படும் குப்பைகளை கொட்டுவதற்கு தனியான இடமொன்றில்லை. இதனால் நகர சபையும் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றது. இந்நிலையில், நகர சபையில் பணியாற்றும் ஊழியர்களில் சிலர், வேறு இடங்களில் குப்பைகளை கொட்டிவிடுகின்றனர். இதுவும் பாரிய பிரச்சினையாகும்.

குப்பை மாஃபியா தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன.குப்பை லொறியை கடைக்கு கொண்டுச் சென்று அந்த கடையின் குப்பைகள் மட்டுமே சேகரிக்கப்படுவதாக, தகவல்கள் கிடைத்தன. அந்த தகவல்களின் அடிப்படையில், அவ்விடத்துக்குச் சென்றபோது, ஊழியர்கள் இருவரும் அவ்வாறே குப்பைகளை பொறுப்பேற்றனர். அதன்போது கையும் மெய்யுமாக சிக்கிக்கொண்டனர்.

அவ்விரு ஊழியர்களும் அந்த கடையில் பணத்தை பெற்றுக்கொண்டே இவ்வாறு செய்துள்ளனர் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. ஆகையால், சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நிறைவடையும் வரையிலும் இவ்விருவரும் பணியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

## முதலாம் ஆண்டு நிறைவு விழா



எஸ்.கணேசன்

மலையக அரசியல் அரங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு சிறப்பு உரையரங்கம் ஹட்டனில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்றது.

ஹட்டன் - டிக்கோயா நகர சபை மண்டபத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், மலையக அரசியல் அரங்கத்தின் முதன்மை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொழிற்சங்க துறவி அமரர். வி.கே வெள்ளையன் அவர்களின் உருவப்படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு விளக்கேற்றி



அஞ்சலி செலுத்தப்பட்டது.

மூத்த ஊடகவியலாளர் - அரசியல் ஆய்வாளர் விக்டர் ஐவன் நிகழ்நிலை தொழிநுட்பத்தின் ஊடாக உரையாற்றினார்.

இதில் சட்டத்தரணி சஞ்சுளா பீட்டர்ஸ், ஹட்டன் - டிக்கோயா நகரசபை உறுப்பினர் எஸ்.கேசவமூர்த்தி உட்பட இளைஞர், யுவதிகள் என பலரும் கலந்துக் கொண்டிருந்தனர்.

## மோட்டார் சைக்கிள்கள் திருடர்கள் சிக்கினர்

நடராஜா மலர்வேந்தன்

பிபில கனுல்வெல பிரதேசத்தில் வசிக்கும் ஒருவர், சில காலமாக மேற்கொண்டு வந்த மோட்டார் சைக்கிள்கள் திருட்டை மெதகம பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த நபர் போலி சாவியை பயன்படுத்தி மோட்டார் சைக்கிள்களை திருடி, மொனராகலை அதிமலே பகுதியிலுள்ள மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் ஒன்றில் வைத்து, மோட்டார் சைக்கிள் பகுதிகளை கழற்றி, வேறு மோட்டார் சைக்கிள்களுக்கு பொருத்தி பணம் சம்பாதித்துள்ளார் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.




அதிமலே பகுதியில் திருட்டு மோட்டார் சைக்கிள்களை பகுதிகளாக கழற்றிய இருவரையும், கனுல்வெல பிரதேச மோட்டார் சைக்கிள் திருட்டில் சம்பந்தப்பட்ட நபரையும் மெதகம பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரும் பிபில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்கள் எதிர்வரும் 1ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## தேயிலைக்கு இடையில் பயறு பயிர்செய்கை

என். ஆராச்சி

கேகாலை மாவட்டத்தில் தேயிலைச் செடிகளுக்கு இடையில், இடையீட்டு பயிர்செய்கையாக பயறு செய்கையை முன்னெடுப்பதற்கு, சிறுதோட்ட தேயிலை அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சப்ரகமுவ மாகாண விவசாய அமைச்சுடன் இணைந்தே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தேயிலைச் செடிகளுக்கு இடையில், பயறு செய்கையை முன்னெடுப்பதால், செலவுகள் குறைவு, பசளைகளை தனியாக இடவேண்டிய தேவையில்லை. உரத்துக்கான செலவுகளும் குறைவு ஆகையால், மிகவும் இலகுவான முறையில், ஊடு பயிர்ச்செய்கையாக பயறு பயிர்ச்செய்கையை முன்னெடுக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



## மாயமான இளைஞனை தேடி வேட்டை

நண்பனின் பிறந்தநாள் நிகழ்வுக்குச் சென்று, நோட்டன் பிரிஜ் எபடின் நீர்வீழ்ச்சியில் நீராடிக்கொண்டிருந்த போது காணாமல்போன இளைஞனை கினிகத்ஹேன பொலிஸார் தேடிவருகின்றனர். பொகவந்தலாவை, லின்ஸ்டன் தோட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் விதுஷான் (17) என்ற இளைஞனே காணாமல் போயுள்ளார். கினிகத்ஹேனையில் உள்ள வர்த்தக நிலையமொன்றிலேயே அவ்விளைஞன் பணியாற்றி வந்துள்ளார்.

அந்த வர்த்தக நிலையத்தில் பணியாற்றும் ஏனைய பணியாளர்களுடன் நேற்று (28) காலையில் சென்றிருந்த அந்த இளைஞன், 11 மணியளவில் குளித்துக்கொண்டிருந்த போதே, நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கினிகத்ஹேன பொலிஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்ட தகவல்களை அடுத்தே பிரதேசவாசிகளுடன் இணைந்து பொலிஸார், அவ்விளைஞனை தேடிவருகின்றனர்.

## நானுஓயாவில் 17 பேருக்கு சுயதொழிலுக்கான கடைகள்

ஆ.ரமேஸ்.

நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட நானுஓயா பிரதேசத்தில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் 17 பேருக்கு சுயதொழில் செய்யவென நுவரெலியா பிரதேச சபையால் அமைக்கப்பட்ப கடைகள் திங்கட்கிழமை (28) காலை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டன.

மத்திய மாகாண சபை மற்றும் நுவரெலியா பிரதேச சபை ஆகியவை இணைந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட எட்டு மில்லியன் ரூபாவில் இக்கடைகள் நிர்மாணிக்கப்பட்டன.

நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே ,முன்னாள் மத்திய மாகாண பை உறுப்பினர் எஸ்.பி.ரத்நாயக்கா, மாகாண உள்ளூராட்சி மன்ற



உதவி ஆணையாளர் யூ.பி.ஹேரத் ,டப்ளியூ.பி.விஜயவர்தன உட்பட சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.

நுவரெலியா -ஹட்டன் பிரதான வீதியின் இரதல்ல குறுக்கு வீதி சந்திக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த 17 கடைகளுக்கு மத்திய மாகாண உள்ளூராட்சி சபை 04 மில்லியன் ரூபாயையும்,நுவரெலியா பிரதேச சபை 04 மில்லியன் ரூபாயையும் வழங்கியுள்ளது. இக்கடைகளுக்கு மொத்தமாக 08 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. .

இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ள கடைகள் மூலம் தமது வியாபாரத்தை முன்னெடுக்கும் சுயதொழிலாளர்கள் ஊடாக நுவரெலியா பிரதேச சபைக்கும் வரிவருமானம் கிடைக்குமென நுவரெலியா பிரதேச சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்களின் போராட்டம் இன்னுமே ஓயவில்லை



எஸ்.கணேசன்

ராஜபக்ஷர்கள் உள்ளிட்ட ஆட்சியாளர்கள், மக்களின் போராட்டம் இன்னும் ஓயவில்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.டி .லால்காந்த தெரிவித்தார்.

கொத்மலை தேர்தல் தொகுதியின் மக்கள் சந்திப்பு கூட்டம் கொத்மலை பூண்டுலோயா பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்றது.

இதில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

“ நாட்டை விட்டோடிய பசில் ராஜபக்ஷ, அண்மையில் நாடு திரும்பினார். பலமான அரசியல் இயக்கத்தை அவர் உருவாக்கபோவதாக சிலர் கூறித்திரிகின்றனர். விமான நிலையம் வந்த பசிலுக்கு அவரின் சகாக்கள் மற்றும் அடியாட்களால் அரச அனுசரணையுடன் வரவேற்பளிக்கப்பட்டது.

ஆனால், தான் நாட்டைவிட்டு செல்ல முற்படுகையில் விமான நிலைய ஊழியர்கள் எப்படி கவனித்தார்கள் என்பதை பசில் ராஜபக்ஷ மறந்துவிடக்கூடாது. மக்கள் போராட்டம் இன்னமும் ஓயவில்லை. அத்துடன் மக்களின் கோரிக்கைகள் அவ்வாறே உள்ளன என்றார்.

கொள்ளையர்கள், பொருளாதாரத்தை நாசமாக்கியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் ,கொள்ளையடிக்கப்பட்ட வளங்கள் நாட்டுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என மக்கள் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றனர். இதையும் பசில் உள்ளிட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேவேளை, ஹிட்லர் பற்றி கதைப்பதற்கு முன்னர் ‘காற்சட்டை’யை எப்படி சரியாக அணிவது என்பதை ரணில் புரிந்துகொள்ள வேண்டும்.” - என்றார்.

## புலமைப்பரிசில் வினாத்தாள்கள் அனைவருக்கும் வழங்கப்படும்

நீலமேகம் பிரசாந்த்

கொத்மலை பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் புலமைபரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கொத்மலை பிரதேச சபை உறுப்பினர் செல்லமுத்து செல்வமதன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கொத்மலை பகுதியில் 40 தமிழ் பாடசாலைகள் உள்ளன. புலமைப் பரிசில் பரீட்சைக்கு 1,026 மாணவர்கள் தோற்றவிருக்கின்றனர். எனவே, அனைத்து மாணவர்களுக்கும் மாதிரி வினாத்தாள்களை கொத்மலை பிரதேச சபையூடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது



என்றார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராரேஸ்வரன் ஆலோசனையில் ‘கல்விக்கு கரம் கொடுப்போம்’ என்ற அடிப்படையில் இத்திட்டம் ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான அனுமதியை கொத்மலை பிரதேச சபை தலைவர் சுசந்த ஜயசுந்தர பிரதீப்குமார வழங்கியுள்ளார் என்றார்.

இன்னும் ஒருசில தினங்களில் கொத்மலையில் அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் இலவச புலமைபரிசீல் மாதிரி வினாத்தாள்களை அச்சிட்டு வழங்கப்படும் எனவும் செல்லமுத்து செல்வமதன் குறிப்பிட்டார்.

# ஜேர்மனியின் ஹிட்லரும், இலங்கையின் ஹிட்லர்களும்

இலங்கையின் பாராளுமன்றத்திலும், பொதுப் பேச்சுகளின் போதும் ஏளனம் செய்து, அல்லது பிறருடன் ஒப்பிட்டுப் பேசுவது வழமை. அண்மையில் அவ்வாறு பேசு பொருளாக அமைந்த ஒரு நபர் அடோல்வ் ஹிட்லர். பிற நாடுகளில் ஹிட்லரின் நாமத்தைப் பயன்படுத்துவது, சாதாரணமாக எதிர்த் தரப்பை இழிவுபடுத்துவதற்கு பயன்படுத்தப்படும்.

இலங்கையில் அவ்வாறில்லாமல், ஹிட்லரை முன்னுதாரணமாக காண்பித்து அல்லது அச்சுறுத்தும் வகையில் உரைகள் இடம்பெறுகின்றன. பொதுவில் ஜனநாயகத்தை விரும்பும் எவரும் ஹிட்லர் எனும் நாமத்தை சற்றேனும் விரும்பமாட்டார்கள்.

இவ்வாறு ஹிட்லர் நாமத்தை பயன்படுத்திய இலங்கையின் அரசியல் தலைமைகளில் ஒருவராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் திகழ்கின்றார். அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டங்களை கட்டுப்படுத்துவதற்கு படைகளை பயன்படுத்தி கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதுடன், அவசர காலச் சட்டமும் பிரயோகிக்கப்படும். பொலிஸ் அனுமதியைப் பெற்று, வீதிகளில் ஏனைய போக்குவரத்துக்கு பாதிப்பின்றி, நான் ஹிட்லரைப் போல ஆட்சி செய்கின்றேன் என கோஷம் எழுப்பலாம் எனும் தொனியில் தமது வரவு வெலவுத் திட்ட உரையில் உரையாற்றும் போது அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் ஒரு ஹிட்லரைப் போன்றே பார்க்கப்பட்டார். குறிப்பாக அவரின் ஆட்சியின் போது, போக்குவரத்து அமைச்சராக திகழ்ந்த திலும் அமுனுகம, 6.9 மில்லியன் மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்தது, அவரை ஒரு ஹிட்லராக திகழச் செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் என்றிருந்தார்.

அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் வென்தருவே உபாலி, கோட்டபாய ராஜபக்சவின் 69 ஆவது பிறந்த தினத்தின் போது, தேவையெனில், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இராணுவ ஆட்சியை முன்னெடுக்க வேண்டும் என்றிருந்தார். ஹிட்லரின் எழுச்சியுடன், ஜேர்மனி எந்தளவுக்கு பின்தங்கிய நிலைக்குச் சென்றது என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

கடந்த கால இலங்கையின் தலைவர்களைப் போலன்றி, 20 ஆம் நூற்றாண்டின் மிகவும் மோசமான ஆட்சியாளராக கருதப்படும் ஹிட்லரின் வரலாற்றை தற்போதைய ஜனாதிபதி நன்கறிவார். அவ்வாறான நிலையில், நாட்டின் தலைவர் இவ்வாறான பொறுப்பற்ற வகையில் கருத்துரைப்பது உண்மையில் பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது.

அத்துடன் போராட்டங்களில் ஈடுபடுவோரை “ஹிட்லரைப் போன்று செயலாற்றுகின்றேன்” எனத் தெரிவிப்பதும், எவ்வாறு ஹிட்லரின் ஆட்சி நிறைவடைந்தது என்பதை அவருக்கு மீண்டும் உணர்த்த வேண்டும். அன்றைய ஹிட்லரினால் ஜேர்மனி நாசம் செய்யப்பட்டு, பொருளாதாரம் சீரழிந்து, நாட்டை சின்னாபின்னமாகி, இறுதியில் தாமும் தற்கொலை செய்து கொண்டார். அன்றைய ஹிட்லரைப் போலவே, இனிவரும் காலங்களிலும் தம்மை ஹிட்லரைப் போல சித்தரிக்க முனைவோருக்கும் நேரும் என்பதில் சந்தேகங்களில்லை.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

அறியாமைகூட ஒரு போதை நிலைதான். ஒருவரின் அறியாமையை உணர்ந்தவர்கள், அவருக்கு உண்மை நிலையை உணர்த்தினாலும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். புத்திமதி சொன்னவர்கள் மீது கோபப்படுவார்கள்.

இளம் வயதிலேயே, சில மூடநம்பிக்கைகளைச் சொல்லி வளர்க்கும்போது, அதை ஆழமாக உண்மை என நம்பிவிடுகின்றார்கள். படித்தவர்கள் கூட, சில தவறான கற்பனைக் கதைகளை நம்புவதுண்டு. ஏன், எதற்கு, எப்படி போன்ற கேள்விகளைக் கேட்டால்த்தான், எந்த விடயங்களிலும் தெளவுபிறக்கும். ப

புத்திசாலிகளைக்கூட ஏமாற்றும் மனிதர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் நடிப்பதிலும் பேசுவதிலும் திறமையானவர்கள். இதனால், ஏமாறுபவர்கள் பின்நாள்களில் எவரையும் நம்பாமல் இருப்பதுண்டு.

துஷ்டர்களைக் கண்டால், விலகிவிடுவது நல்லது. எனினும் அப்பாவிகள் எதுவும் புரியாமல், தவறாகப் பேசினால் அதைப் பெரிதுபடுத்தலாகாது.

எமது முன்னோர்கள் அறிவுரீதியாக சொல்வதையும் சிலர் கேலியாக எடுத்துக் கொள்வதுண்டு. தங்கள் மூதாதையரிடம் கற்ற அனுபவங்களைச் சொல்வதை எடுத்தெறிந்து பேசக்கூடாது. எதையும் ஆழமாகச் சிந்திக்கவும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

வரலாற்றை அறிந்திருப்பது

# இன உறவின் அடித்தளம்

**மொஹமட் பாதுஷா**

கிழக்கில் தமிழ் மக்கள் செறிவாக வாழும் பிரதேசம் ஒன்றில் முஸ்லிம் போடியார் ஒருவருக்குச் சொந்தமான வயல் நிலத்தை தமிழர் ஒருவர் முறைகேடாக ஆக்கிரமிக்க முற்பட்டிருக்கின்றார். அப்போது அருகிலுள்ள வயலின் உரிமையாளரான தமிழர் அவரை விரட்டியிருக்கின்றார்.

இந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் முஸ்லிம் பிரதேசமொன்றில் தமிழ் குடும்பமொன்றிற்குச் சொந்தமான பூர்வீகக் காணிக்கு முஸ்லிம் நபர் ஒருவர் உரிமை கொண்டாட தொடங்கியுள்ளார். இதனையறிந்த ஏனைய முஸ்லிம்கள் அவருக்கு சாரமாரியாக ஏசி, அங்கிருந்து துரத்தியடித்தது மட்டுமன்றி காணி உரிமையாளருக்கும் அறிவித்துள்ளனர்.

அகவே, தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான அரசியல் உறவை ஒருபுறம் வைத்துவிட்டு நோக்கினால், சாதாரண மக்களுக்கு இடையிலான இன உறவு என்பது இன்னும் பலமாகவே உள்ளது.

ஆனால் ஒரு முப்பது வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட இப்போது பலமாக இருப்பதாக சொல்ல முடியாது. உண்மையில் அது வீழ்ச்சி கண்டுள்ளது. அக்காலத்தில் இருந்த உறவுக்கும் இப்போதுள்ள உறவுக்கும் வித்தியாசமுள்ளது. அல்லது வேறு பரிமாணம் ஒன்றை எடுத்துள்ளது எனலாம்.

இப் பத்தியின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட இரு சம்பவங்களும் ஆகப் பிந்திய உதாரணங்கள் மட்டும்தான். இதுபோல நூறு சம்பவங்கள் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் தினமும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. சமகாலத்தில் கசப்பான நிகழ்வுகளும் இடம்பெறாமல் இல்லை.

ஆயினும். ஒரு விடயத்தை இங்கு கூர்ந்து கவனிக்க வேண்டியுள்ளது.

அதாகப்பட்டது, மேலே குறிப்பிட்ட சம்பவங்களில் சகோதர இனத்தவருக்கு ஒரு அநியாயம் நடந்து விடக் கூடாது என்பதற்காக தமது இனத்தைச் சேர்ந்தவரையே பகைத்துக் கொண்ட தமிழரும், முஸ்லிமும் கடந்தகால வரலாற்றை அறிந்தவர்கள் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

இந்த இடத்தில் முஸ்லிம்கள் பூர்வீகமாக வாழ்ந்தார்கள். இந்தப் பகுதியில் தமிழர்களுக்கு சொத்துக்கள் இருந்தன என்பதை அறிந்து வைத்திருக்கின்ற ஒரு பொதுமகன்தான் நியாயத்தைப் பேசுவதற்கான உந்துதலைப் பெறுவான். இது இயல்பானது.

அந்த வகையில் பார்த்தால், (குறிப்பாக வடக்கு, கிழக்கில்) 1970களுக்கு முன்பு பிறந்த முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இவ்விரு இனங்களின் உறவும் எப்படி இறுக்கமாக, பிட்டும் தேங்காய்ப்பூவும் போல இருந்தது என்ற வரலாறு தெரியும். இன உறவு பற்றிய பல பசுமையான சம்பவங்கள் அவர்கள் மனதில் நினைவுகளாக உள்ளன.

70 களில் பிறந்தவர்களும் இந்த பிணைப்பை கொஞ்சம் நேரில் பார்த்துள்ளார்கள். அன்றேல், அது பற்றி அதிகம் அறிந்து வைத்துள்ளார்கள். ஒரு திரும்பல் புள்ளியில் வாழ்ந்த தலைமுறை என்ற வகையில் தமிழ்-முஸ்லிம் உறவு பற்றிய புரிதல் 80களின் குழந்தைகளுக்கும் இருப்பதாகச் சொல்லலாம்.

ஆனால். 1990ஆண்டிலும், 2000ஆம் ஆண்டுக்குப் பிறகும் பிறந்தவர்களான இன்றைய இளைய தலைமுறைக்கு இந்த வரலாறும், முன்கதையும் தெரியாது என்றுதான் கூற வேண்டும்.

முஸ்லிம்களும் தமிழர்களும் ஏன் சிங்கள மக்களும் கூட எவ்வாறு பின்னிப் பிணைந்து இருந்தார்கள், அவர்களுக்கு இடையிலான கலாசார ஒற்றுமை, பழக்க வழக்கங்கள் என்ன, எந்தப்புள்ளியில் முஸ்லிம்-தமிழ் உறவு கசப்பான அனுபவங்களைச் சந்தித்தது? இவ்விரு இனங்களதும் பிணைப்பு யாரின் நடவடிக்கையால் இறங்குமுகமாகத் தொடங்கியது என்பதெல்லாம் இளைய தலைமுறைக்கு தெரியாது.

இன உறவை ஆழமாக அறிந்த, அனுபவசாலிகளான மூத்தவர்கள் தமது பிள்ளைகளுக்கும் இளைய தலைமுறைக்கும் அதன் அடிவேர்கள் பற்றி எடுத்துரைத்தது மிகக் குறைவாகும். இயந்திர உலகில் பழங் கதைகளை எல்லாம் அறிந்து கொள்வதற்கான ஆர்வமும் இந்தத் தலைமுறையிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

இப்போதிருக்கின்ற இளைய தலைமுறையில் இருந்துதான் அதற்கடுத்த தலைமுறை உருவாகப் போகின்றது. அவர்களுக்கு கடந்தகால சரித்திரங்கள் இதைவிடக் குறைவாகவே கடத்தப்படப் போகின்றன என்பதை கருத்திற் கொள்ள வேண்டும்.

இனங்களுக்கு இடையிலான நல்லுறவை கட்டியெழுப்ப நாம் முற்படுகின்றோம் என்றால், வரலாறு தெரியாமல் இருத்தல் என்பது ஒரு மோசமான, ஆபத்தான போக்கு என்றுதான் கருத வேண்டியுள்ளது.

தமது அறிவுக்கு எட்டிய வரையில் தமது காலத்தில் நடந்த, கேள்விப்பட்ட சம்பவங்களை வைத்து, இளைஞர்கள் செயற்பட முற்படுகின்ற போது, வேண்டத்தகாத பல நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

இன உறவின் ஆழ அகலங்கள், வரலாறு பற்றியெல்லாம் எதனையும் அறிந்திராத இளைஞர்கள், இப்போது நடக்கின்ற ஒரு சிறிய சம்பவத்தை வைத்துக் கொண்டு பகைமை பாராட்ட முனைவதை சமூக வலைத்தளங்களில் மட்டுமன்றி பொது வாழ்விலும் காண்கின்றோம்.

எனவே, வரலாற்றுச் சம்பவங்கள் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு உள்ளது உள்ளபடி கடத்தப்பட வேண்டியது இன்றியமையாதது. இன உறவை கட்டியெழுப்பும் முயற்சி;க்கு இதுதான் அடித்தளமாகும்.

அரசியல், இனம், மதம், சாதி, பிராந்தியம் என்ற வேறுபாடுகளைக் கடந்து இவ்விடயத்தை செய்தாக வேண்டும். இப்போது இவற்றையெல்லாம் வைத்தும் இலாபம் தேடிக் கொண்டிருக்கின்ற சக்திகள் இம்முயற்சிக்கு தடைபோடலாம். அதையும் தாண்டிச் செல்ல வேண்டியுள்ளது.

தமிழர்களும் முஸ்லிம்களும் வடக்கு -கிழக்கிலும் சரி அதற்கு வெளியிலும் சரி மொழி ரீதியான, பூர்வீக ரீதியான பிணைப்பை கொண்டிருப்பது மட்டுமன்றி கலாசார நடைமுறைகள் பலவற்றை தமக்கிடையே பகிர்ந்து கொள்கின்றனர்.

முஸ்லிம்கள் தமிழர் அரசியலோடு ஒன்றித்துப் பயணித்தனர். தமிழரின் போராட்ட வேட்கைக்காக பல முஸ்லிம் இளைஞர்கள் தமது உயிர்களை தியாகம் செய்தனர். அப்பாவித் தமிழ் குடும்பங்களுக்கு அடைக்கலம் கொடுத்தனர். 1990 வரையும் இது தொடர்ந்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, வடகிழக்கு மாகாண சபை உருவாகிய பின்னர் தமிழ் ஆயுதக்குழுக்களும் பெருவளர்ச்சி பெற்றன. அத்துடன் ஆயுதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு போக்கு உருவானது. இவையெல்லாம் ஒரு கட்டத்தில் மற்றைய சிறுபான்மையினமான முஸ்லிம்களை நோக்கி திரும்பியது.

இந்த மாறுதல் பல கசப்பான அனுபவங்களை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தியது. ஏகப்பட்ட அட்டூழியங்கள் ஆயுதக் குழுக்களால் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழத்தப்பட்டது. தமிழர்களும் முஸ்லிம்களும் பிரிக்கப்பட்ட முதற் சந்தர்ப்பம் இதுவாகும். ஆளுக்காள் நம்பிக்கையீனமாக பார்க்கத் தொடங்கினர்.

சமகாலத்தில், சில முஸ்லிம் ஊர்களில் இருந்த சண்டியர்களும் ஆங்காங்கு தமிழ் மக்களுக்கு அநியாயங்களைச் செய்தனர். ஆனபோதும் ஆயுதக்குழுக்களும் சண்டியர்களும் பார்த்த வேலைதானே இது. தவிர, பொதுவாக அப்பாவி தமிழர்களுக்கோ முஸ்லிம்களுக்கோ இதில் உடன்பாடு இருக்கவில்லை.

அதன்பிறகு அரசியல்வாதிகள் தொடக்கம் விடுதலைப் புலிகள் தொட்டு சஹ்ரான் கும்பல் வரை இந்த தீய்க்கு எண்ணெய் ஊற்றியுள்ளன. பெருந்தேசியமும் சில வெளிநாட்டுச் சக்திகளும் இதில் குளிர்காய்ந்தன.

இதனையெல்லாம் பிள்ளைகளுக்குச் சொல்ல வேண்டியுள்ளது. நடந்த நல்ல, கெட்ட சம்பவங்கள் எல்லாவற்றையும் சொல்லித்தான் வரலாற்றை தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. பக்கச் சார்பாகவோ, ஒளித்து மறைத்தோ பேசுவதானது, தேவையற்ற புரிதல்களை ஏற்படுத்தலாம்.

இன உறவை சம்பந்தப்பட்ட சமூகங்களுக்குள் இருந்ததான் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. அதைவிடுத்து, வெளித்தரப்பால் இதனைச் செய்ய இயலாது.

வெளிநாடுகளோ, நிறுவனங்களோ கருத்தரங்குகளை நடத்துவதால் தமிழ் - முஸ்லிம் உறவை கட்டியெழுப்ப முடியாது. அரசாங்கமும் அரசாங்கங்களும் அரசியல்வாதிகளும் நல்லிணக்கம் பற்றிய கொள்கைகளை வகுப்பதால் ஒன்றும் நடக்காது.

நல்லிணக்க அமைச்சு ஒன்றை நிறுவி, அதில் அமைச்சருக்கும் ஏகப்பட்ட ஊழியர்களுக்கும் வேலை வழங்கி, பெருந்தொகை நிதியைச் செலவிடுவது பாராட்டத்தக்கது என்றாலும், அதனால் உண்மையான இன உறவு உள்ளார்ந்தமாக தோற்றம் பெற வாய்ப்பில்லை.

இன்றைய இளைஞர்கள் இப்போதுள்ள அரசியல்வாதிகளைப் பார்த்து, ‘ஓ.... இவர்கள்தான் பெரிய அரசியல் தலைவர்கள், மேதைகள். இவர்கள் செய்வதுதான் உண்மையான அரசியல்’ என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மறைந்த எம்.எச்.எம்.அஷ;ரப், பாக்கிர் மாக்கார், ஏ.சி.எஸ்.ஹமீட், ராசீக் பரீட் என பல அரசியல் முன்னோடிகளை முஸ்லிம் இளைஞர்களுக்கு தெரியாது.

தந்தை செல்வா, அமிர்தலிங்கம் மற்றும் தொண்டமான் போன்ற தமிழ் தலைவர்கள் எவ்வாறாக செயற்பட்டார்கள் என்ற விடயம் கணிசமான இளைய தலைமுறை தமிழர்களுக்கு தெரியாது.

அதே மாதிரி, இன உறவின் கடந்தகாலமும் 90களுக்குப் பிறகு பிறந்தவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். எனவே, ‘இப்போது இருப்பதுதான் இன உறவின் சரியான அடிப்படை’ என்று அவர்கள் தவறாக விளங்கிக் கொண்டிருப்பதாக தெரிகின்றது.

தீவிர இனப் பற்றாளர்கள், அரசியல் கூத்தாடிகளுடன் சேர்ந்து கொண்டு, வரலாறு தெரியாத இளைஞர்களும் நிகழ்கால இன முரண்பாடுகளுக்கு தூபமிடுவதை காணக் கூடியதாக உள்ளது. இதனைச் சீர்செய்வதற்கு, கடந்தகால வரலாற்றை அவர்களுக்கு சொல்ல வேண்டியது மூத்தவர்களின் கடமையாகும்.

கடந்த தலைமுறைக்கு தெரிந்த ஒன்றை, இந்தத் தலைமுறைக்குச் சொல்லவில்லை என்றால், அவர்கள் தமக்குத் தெரியாத ஒரு வரலாற்றை தமது பிள்ளைகளுக்குச் சொல்வதற்கான எந்த வாய்ப்புக்களும் இல்லை.

## கடிதங்கள்

### கோழிக் கழிவுகளால் அசௌரியம்



முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில், கைவேலி பகுதியில் வீதி ஓரமாக கோழிக்கழிவுகள் கொண்டப்பட்டுள்ளதால் வீதியால் பயணிக்கும் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள். இதுதொடர்பில் பல தடவைகள் எடுத்துகூறியும் உரிய நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

இறைச்சிக்காக உரிக்கப்படும் கோழியின் கழிவுகள், கைவேலிப் பகுதியின் வயல் நிலங்கள் உள்ள வீதி ஓரமாக, கடந்த சில நாள்களாக கொட்டப்பட்டு வருவதாக மக்கள் தெரிவித்துள்ளார்கள்

இவ்வாறு கொட்டப்படும் கழிவுகள், மழை காலத்தில் துர்நாற்றம் வீசுவதுடன் அருகில் உள்ள வயல் நிலங்களில் கலக்கின்றன,

ஒரு சிலரின் பொறுப்பற்ற இவ்வாறான செயற்பாட்டால் வீதியால் செல்லமுடியாது, துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

செ. கீதாஞ்சன்

# “பெண்கள் ஆடை அணியாவிட்டாலும் அழகுதான்”

### மீண்டும் சர்ச்சையில் சிக்கிய பாபா ராம்தேவ்



அண்மையில் “ மகாராஷ்டிரா மாநிலம் தானேவில் இடம்பெற்ற யோகா நிகழ்வொன்றில் பிரபல யோகா குரு ‘பாபா ராம்தேவ்‘ கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்.

இதன்போது பாபா ராம்தேவ் ”பெண்கள் சேலை அணிந்தாலும், சுடிதார் அணிந்தாலும், எதுவும் அணியாமல் இருந்தாலும் கூட அழகாக தான் இருப்பார்கள்” எனத் தெரிவித்திருந்தார்.

இக்கருத்தானது முகம் சுளிக்கும் விதத்தில் இருந்ததாக அக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த பெண்கள் பலரும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் இது குறித்த வீடியோவானது இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதனையடுத்து பாபா ராம் தேவ் தெரிவித்த கருத்துக்குக் கண்டனம் தெரிவித்த மேற்கு வங்க அமைச்சர் மஹுவா மொய்த்ரா ”பாபா ராம்தேவின் எண்ணம் இவ்வாறு இருப்பதற்கு, அவரது கீழ்த்தரமான பார்வையே காரணம் “ எனத் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ஜார்க்கண்ட்

## மனைவியின் முகத்தில் அசிட் வீசிய கணவர்



ஜார்க்கண்ட் மாநிலம்,ராஞ்சி மாவட்டம், நம்கும் பகுதியைச் சேர்ந்தவர் அமீர் கான். இவர் அண்மையில் ஹினா பர்வீன் என்ற பெண்ணைத் திருமணம் செய்துள்ளார்.

இந்நிலையில் அமீர் தனது மனைவியிடம் ”தான் மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கப் போவதாகவும் அதற்கு வரதட்சணை பணமான 70, 000 ரூபாயை உன் வீட்டில் இருந்து வாங்கித் தருமாறு” வற்புறுத்தி வந்துள்ளார்.

இதனையடுத்து கடந்த சனிக்கிழமை ஹினா தனது தந்தை வீட்டிற்குச் சென்று பணம் கேட்டுள்ளார். அதற்கு அவரது தந்தையும் விரைவில் பணத்தை ஏற்பாடு செய்து தருவதாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஹினா மீண்டும் தனது கணவரின் வீட்டுக்குச் சென்றபோது அமீர் ”70, 000 ரூபாய் எங்கே?” எனக் கேட்டுள்ளார்.

அதற்கு தனது தந்தை விரைவில் பணத்தை ஏற்பாடு செய்வதாக ஹினா தெரிவித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அமீர் ஹினாவிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் வாக்குவாதம் முற்றிய நிலையில், வீட்டில் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த அசிட்டை அமீர் ஹினாவின் முகத்தில் ஊற்றிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார்.

இதனையடுத்து ஹினாவின் அலறல் சத்தம் கேட்டு அங்கு வந்த அக்கம்பக்கத்தினர் , ஹினாவை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில் முகம் உட்பட பல்வேறு உடல்பாகங்களில் ஆசிட் பட்டதால் படுகாயமடைந்த ஹினாவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஹினாவின் வாய்க்குள்ளும் ஆசிட் சென்றுள்ளதால் அவரால் பேச முடியாது என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேசம்

## ஆசிரியைக்கு ‘ஐ லவ் யூ‘ கூறிய மாணவர்கள் கைது



உத்தரப் பிரதேசத்தில் ஆசிரியை ஒருவருக்கு மாணவர்கள் சிலர், காதல் தொல்லை கொடுத்து வந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மீரட் நகரில் உள்ள கல்லூரி ஒன்றில் பணிபுரிந்து வரும் ஆசிரியை ஒருவரை குறித்த கல்லூரியில் கற்கும் மாணவர்கள் சிலர் கடந்த சில நாட்களாக காதலிப்பதாகத் தெரிவித்து தொடர்ந்து தொந்தரவளித்து வந்துள்ளனர்.

குறிப்பாக அவ்ஆசிரியை எங்கு சென்றாலும் அவரைப் பின்தொடர்ந்து செல்லும் மாணவர்கள் அவரிடம் ஆபாசமாகவும் பேசி வந்துள்ளனர்.

இது தொடர்பாக ஆசிரியை அவ்வப்போது எச்சரித்து வந்தாலும் அம்மாணவர்கள் இதனைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் தொடர்ந்து அத்தகைய செயலில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதனையடுத்து அம்மாணவர்களின் பெற்றோர்களிடம் இது குறித்து ஆசிரியை தெரியப்படுத்தியபோதும் அவர்கள் இதனைக் கண்டுகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத்

## 40 வருடங்களாக பிரசாரங்கள் இன்றி வாக்களிக்கும் கிராமம்



குஜராத்தில் உள்ள ராஜ் சமாதியாலா கிராமத்தில், 40 வருடங்களாக பிரசாரம் நடத்தப்படாமல் மக்கள் வாக்களித்து வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த கிராமம், தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களை கிராமத்திற்குள் அனுமதித்தால் தீங்கு வருமென 40 வருடங்களாக பிரசாரத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதுகுறித்து அக்கிராமத்தின் பஞ்சாயத்து தலைவர் கூறுகையில், ”அரசியல் கட்சிகள் பிரசாரம் செய்யக்கூடாது என்ற விதி 1983ஆம் ஆண்டு முதல் இங்கு நடைமுறையில் உள்ளது.

இருப்பினும், ஜனநாயகத்தில் தேர்தலின் முக்கியத்துவத்தை இங்குள்ள மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். எனவே தகுதியுள்ள அனைவருக்கும் வாக்களிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக்கிராம அபிவிருத்திக் குழுவால் (VDC) பல விதிகள் விதிக்கப்பட்டுள்ளன. விதிகளில் ஏதேனும் ஒன்றை மீறினால் அபராதம் விதிக்கப்படும்.

கேரளா

## திருநங்கைகள் கோவிலில் திருமணம் செய்யத் தடை




கேரளாவின் பாலக்காடு மாவட்டத்தில், திருநங்கைகளின் திருமணத்திற்கு கோவில் நிர்வாகம் அனுமதி மறுத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நிலன் கிருஷ்ணா என்பவரும் அத்விகா என்பவரும் சில மாதங்களுக்கு முன்னர் நிச்சயதார்த்தம் செய்துகொண்டுள்ளனர். இதனையடுத்து இருவரும் திரு-கச்சம் குறிச்சி கோவிலில் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தனர்.

இந்நிலையில் இவர்கள் திருநங்கைகள் என்பதால், அவர்களது திருமணத்திற்கு அனுமதி வழங்க குறித்த கோவில் நிர்வாகத்தினர் மருத்துள்ளனர்.

இதனால் மன உளைச்சலுக்கு ஆளான அவர்கள் அவர்களது திருமணத்தை அருகிலுள்ள மண்டபத்தில் நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் இச் சம்பவம் குறித்து கோவில் அதிகாரி ஒருவர் கூறுகையில்,

இதுபோன்ற வழக்கில் சுதந்திரமாக முடிவெடுக்க எங்களுக்கு உரிமை இல்லை என்பதால், அவ்வாறு கூறினோம்.

குறிப்பாக இதுபோன்ற திருமணங்கள் நடப்பதால், சட்டச் சிக்கல்களுக்கு

தாம் முகம் கொடுக்க நேரிடும் என்பதால் மறுப்புத் தெரிவித்தோம் ” என்றார்.



## ஹன்சிகாவின் விருந்து



தமிழ் சினிமாவில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை முன்னணி நடிகையாக இருந்தவர் ஹன்சிகா. இந்நிலையில் தனது நெருங்கிய தோழியின் முன்னாள் கணவருமான சோஹைல் கத்துரியா என்பவரை வரும் டிசெம்பர் 4ம் திகதி ஜெய்ப்பூரில் உள்ள ஒரு அரண்மனையில் மணக்க உள்ளார்.

இந்த நிலையில், திருமணத்திற்கு முன்னதாக தனது நெருங்கிய தோழிகளுக்கு ‘பேச்சுலர்’ பார்ட்டி ஒன்றை வழங்கியுள்ளார் ஹன்சிகா.

அது குறித்த வீடியோவை ‘என்றென்றைக்கும் மிகச் சிறந்த பேச்சுலரேட் சிறந்தவர்களின் வாழ்த்துகளுடன்,” என்று பதிவிட்டுள்ளார்.





## மீண்டும் ஹீரோ

தமிழ் சினிமாவின் முக்கிய நகைச்சுவை நடிகர் கவுண்டமணி, தொடர்ச்சியாக நகைச்சுவை வேடங்களில் நடித்தவர் ஒருக்கட்டத்தில் சினிமாவை விட்டு சற்று விலகியிருந்தார். நீண்ட இடைவெளிக்கு பின் சில ஆண்டுகளுக்கு முன் எங்களுக்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது, 49 ஓ ஆகிய திரைப்படங்களில் கதையின் நாயகனாக நடித்தார்.

அதன்பிறகு சில படங்களில் நடித்தார். கடந்த 6 ஆண்டுகளாக எந்த படத்திலும் நடிக்காதவர் தற்போது பழனிச்சாமி வாத்தியார் என்ற படத்தில் ஓய்வு பெற்ற உடற்கல்வி ஆசிரியராக நடிக்கப் போகிறார்.

வருகிற ஜனவரி மாதத்தில் படப்பிடிப்பு தொடங்க உள்ளது. முக்கியமாக, இந்த பழனிச்சாமி வாத்தியார் படத்தில் கவுண்டமணியுடன் தனுஷ் அல்லது சிவகார்த்திகேயனை கெஸ்ட் ரோலில் நடிக்க வைப்பதற்கான முயற்சிகளும் நடக்கின்றன.

## வாய்ப்பு கிடைத்தால்

பிரபாஸுடன் திருமணம்

பிரபாஸ் நடிப்பில் ஓம் ராவத் இயக்கத்தில் உருவாகி வரும் ஆதிபுருஷ் படத்தில் அவருக்கு ஜோடியாக நடிகை கிர்த்தி சனோன் நடித்துள்ளார். தனது ஒவ்வொரு பேட்டியிலும் இந்த படம் குறித்து பேசும்போதெல்லாம் பிரபாஸ் மீதான தனது நெருக்கத்தை வெளிப்படையாகவே கூறி வருகிறார் கிர்த்தி சனோன்.

அண்மையில் அவர் அளித்த பேட்டி ஒன்றில், வாய்ப்பு கிடைத்தால் பிரபாஸை தான் திருமணம் செய்து கொள்ள தயாராக இருக்கிறேன் என்று கூறியுள்ளார். இன்னும் ஒரு பேட்டியில், “ஆதிபுருஷ் படப்பிடிப்பின்போது பிரபாஸ் எனக்கு தெலுங்கு டீச்சராக இருந்து தெலுங்கு கற்றுக் கொடுத்தார்.. அவருக்கு நான் ஹிந்தி கற்றுக் கொடுத்தேன்” என்றும் கூறியுள்ளார்.

அதுமட்டுமல்ல ஹிந்தியில் கிர்த்தி சனோனுடன் இணைந்து நடித்துள்ள வருண் தவான் ஒரு பேட்டியில் கூறும்போது, கிர்த்தி சனோன் வாழ்க்கையில் அண்மைகாலமாக ஒரு உயரமான இளவரசன் நுழைந்துள்ளார் என கூறியுள்ளார்.



## சமந்தாவுக்கு ஆயுர்வேத சிகிச்சை

தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையான சமந்தா, சில வாரங்களுக்கு முன்பு தான் தசை அழற்சி நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக வெளிப்படையாக அறிவித்திருந்தார்.

இதனையடுத்து, தனது தசை அழற்சி நோய்க்காக அமெரிக்க மருத்துவமனையில் சமந்தா சிகிச்சை மேற்கொண்டாராம். அதை இந்தியா திரும்பிய பிறகும் தொடர்ந்தார் என்கிறார்கள்.

இருப்பினும் அது பூரண குணமளிக்காத காரணத்தால் கேரள ஆயுர்வேத சிகிச்சையை சிலர் பரிந்துரைத்துள்ளனர். அதன்படி அவர் அந்த சிகிச்சையை மேற்கொண்டாராம். அதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால், சமந்தா விரைவில் படப்பிடிப்பில் கலந்து கொள்ளும் சூழல் வரும் என்றும் கூறுகிறார்கள்.

சமந்தா தற்போது விஜய் தேவரகொன்டா ஜோடியாக ‘குஷி’ என்ற தெலுங்குப் படத்தில் நடித்து வருகிறார். சமந்தாவின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு அந்தப் படத்தின் படப்பிடிப்பை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்கள்.

## வடிவேலுவுக்கு முதலிடம்



‘பரியேறும் பெருமாள், கர்ணன்’ திரைப்படங்களுக்குப் பிறகு மாரி செல்வராஜ் இயக்கி வரும் திரைப்படம் ‘மாமன்னன்’. உதயநிதி ஸ்டாலின் கதாநாயகனாக நடிக்க, கீர்த்தி சுரேஷ் கதாநாயகியாக நடிக்க மலையாள நடிகர் பகத் பாசில், நகைச்சுவை நடிகர் வடிவேலு முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

ஏஆர் ரஹ்மான் இசையமைக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து இறுதிக் கட்டப் பணிகள் நடந்து வருகிறன. இந்த நிலையில், உதயநிதி ஸ்டாலினின் பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு ‘மாமன்னன்’ படக்குழு ஏஆர் ரஹ்மானின் வாழ்த்து வீடியோவுடன் படத்தின் சிறு முன்னோட்டம் ஒன்றை வெளியிட்டது.

அந்த வீடியோவின் இறுதியில் திரைப்படத்தின் நட்சத்திரங்கள், டெக்னீஷியன் அடங்கிய போஸ்டரில் வடிவேலு பெயரைத்தான் முதலில் போட்டிருக்கிறார்கள்.

பெல்ஜியம்

# FIFA உலகக் கோப்பையால் வெடித்தது வன்முறை





கால்பந்து ரசிகர்களின் மிகுந்த எதிர்ப்பார்ப்புக்கு மத்தியில் FIFA உலகக்கோப்பைத் தொடரானது கடந்த 20 ஆம் திகதி கட்டாரில் கோலாகலமாக ஆரம்பமானது.

டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இத்தொடரில் உலகம் முழுவதிலும் இருந்து 32 நாடுகளின் அணிகள் பங்கேற்றுள்ளன.

அந்தவகையில் நேற்று முன்தினம் குரூப் எப் பிரிவில் நேற்று பலம் வாய்ந்த பெல்ஜியம் அணி மொராக்கோவை எதிர்க்கொண்டது.

பரபரப்பாக ,இடம்பெற்ற இப்போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்தை வீழ்த்தி மொராக்கோ அணி அபார வெற்றிபெற்றது.

இதனால் ஆத்திரமடைந்த ரசிகர்கள் பெல்ஜியத்தில் மொரோக்கோ கொடியை தீவைத்து கொழுத்தியும் கார்கள், பைக்குகளுக்கு தீ வைத்தும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வன்முறையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் வன்முறையில் ஈடுபட்ட ரசிகர்களைக் கைது செய்தனர்.

பிரித்தானியா



## மார்பகத்தால் மன உளைச்சல்

### நிதி திரட்டும் பெண்

பிரித்தானியாவைச் சேர்ந்தவர் ஜாஸ்மின் மெக்லெட்சி. 33 வயதான இவர் கேக் தயாரிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றார். இவருக்கு 5 வயதில் ஒரு மகளும் உள்ளார்.

இந்நிலையில் அவருக்கு குழந்தை பிறந்த பின்னர் உடல் எடை மற்றும் மார்பகங்களின் அளவு பெரிதாகிவிட்டதாக்க கூறப்படுகின்றது.

தனது பெரிய மார்பகங்கள் காரணமாக பலரும் தன்னை கிண்டல் செய்து வருவதாகவும், இதனால் மிகுந்து மனஉளைச்சலுக்கு ஆளாகி இருப்பதாகவும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜாஸ்மின் மேலும் தெரிவிக்கையில் "எனது பெரிய அளவிலான மார்பகங்கள் எனக்கு பிடிக்கவில்லை. எங்கு சென்றாலும் அசௌகரிகமான உணர்வை அளிக்கின்றன. உறங்கும்போது கூட அவற்றின் எடையால் அவதிப்படுகிறேன். மேலும் மார்பகத்தின் அளவைக் குறைக்கும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும்படி மருத்துவர்கள் என்னை அறிவுறுத்தி வருகின்றனர்.

இதனால் அறுவைச் சிகிச்சை செய்வதற்காக நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

கமரூன்



## இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட 14 பேர் உயிரழப்பு

மத்திய ஆபிரிக்க நாடான கமரூனில்( Cameroon) இறுதிச்சடங்கு நிகழ்வொன்றில் கலந்து கொண்ட 14 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

டமாஸ் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இறுதிச்சடங்கு நிகழ்ச்சியொன்று நடைபெற்றுள்ளது.

இதன்போது எதிர்பாராத விதமாக அப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் குறித்த இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட பலரும் மண்ணுக்குள் சிக்கிக்கொண்டர்.

இந்நிலையில் மண்ணுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் மீட்புக் குழுவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் எனவும், இதுவரை மண் சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மெக்சிகோ

## வாலுடன் பிறந்த பெண் குழந்தை



மெக்சிகோவில் பெண் குழந்தையொன்று வாலுடன் பிறந்துள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்பெண் குழந்தையானது மெக்சிகோவின் நியூவோ லியான் மருத்துவமனையில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் பிறந்துள்ளது.

சி-செக்ஷன் மூலம் பிறந்த இக் குழந்தையானது தற்போது முழு ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும், இதன் உடலில் இருந்த வால் இரண்டு அங்குல நீளம் கொண்டதாகக் காணப்பட்டதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை இது போன்று வாலுடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை, உலகளவில் 200க்கும் குறைவாகவே இருப்பதாகவும், இது மெக்சிகோவில் பதிவு செய்யப்பட்ட முதல் சம்பவம் எனவும் மருத்துவர் ஜோஸ் ரூடா தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜோஸ் ரூடா மேலும் தெரிவிக்கையில் " பகுப்பாய்வுகளின் படி, அது தசை, இரத்த நாளங்கள் மற்றும் நரம்புகளைக் கொண்ட ஒரு உண்மையான வால் ஆகும்.

கருப்பையில் வளரும் கருவின் வாலில் இருந்து இவ் வாலானது எல்லாக் குழந்தைகளுக்கும் வெளிப்படுவதாகக் கருதப்படுகிறது. ஆனால் பொதுவாக அது மீண்டும் உடலால் உள் இழுக்கப்பட்டு அது டெயில் போனாக உருவாக்குகின்றது . மேலும் அவை பெரும்பாலும் ஆண் குழந்தைகளிலேயே காணப்படுகின்றன " என்றார்.

அத்துடன் "உண்மையான வால்கள்" மிகவும் அரிதானவை எனவும், இதுவரை கண்டறியப்பட்ட வால்களில், மிக நீளமானவை 20 சென்டிமீற்றர் (7.9 அங்குலங்கள்) எனவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா



## மின் கம்பத்தில் தொங்கிய விமானம்

### இருளில் மூழ்கிய 1 லட்சம் வீடுகள்

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணத்தில் மொவ்ண்ட்கொமெரி என்ற நகரம் உள்ளது. இந்நகரில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வீடுகள் உள்ளன. குறித்த நகருக்கு மின் விநியோகம் வழங்கும் மின் கம்பத்தின் மீது நேற்றுமுன்தினம் இரவு இருவர் பயணித்த சிறிய ரக விமானமொன்று மோதி அந்தரத்தில் தொங்கியுள்ளது.

இவ்விபத்தினால் அப்பகுதியில் மின் இணைப்பு தடைபட்டது. இதனால் சுமார் 1 லட்சம் வீடுகள் மற்றும் தொழில்நிறுவனங்களில் மின் இணைப்பு துண்டக்கப்பட்டது.

தகவலறிந்த மீட்புக்குழுவினர் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் விமானத்தில் சிக்கிய 2 பேரையும் பத்திரமாக மீட்டனர்.



பிரித்தானியர்

## ஒளிரும் கிறிஸ்மஸ் ரெயில்



பிரித்தானியாவில் கிறிஸ்மஸ் பண்டிகையினையொட்டி வண்ணமயமான விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சிறப்பு ரெயில் சேவையொன்று நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

டார்ட்மவுத் என்ற ரயில்வே நிறுவனத்திற்குச் சொந்தமான குறித்த ரெயிலானது வருடந்தோறும் கிறிஸ்மஸ் பண்டிகைக்காக இரவில் கண்களை பறிக்கும் வகையில் அழகாக அலங்கரிக்கப்பட்டு இயக்கப்படுகின்றது.

அந்தவகையில் குறித்த ரெயில் சேவையானது தொடர்ச்சியாக 5 வாரங்கள் இயக்கப்படவுள்ளதாகவும், மக்கள் தாராளமாக இதில் பயணம் செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உலகக் கிண்ணம்:

# சமநிலையில் ஸ்பெய்ன்-ஜேர்மனி போட்டி

### பெல்ஜியத்தை வென்ற மொராக்கோ

கட்டாரில் நடைபெற்று வரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில், நேற்று அதிகாலை நடைபெற்ற ஸ்பெய்ன், ஜேர்மனி அணிகளுக்கு இடையிலான குழு ஈ போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதேவேளை, நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கனடாவுடனான குழு எஃப் போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் குரோஷியா வென்றிருந்தது. இதையடுத்து உலகக் கிண்ணத் தொடரிலிருந்து கனடா வெளியேற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற மொராக்கோவுடனான குழு எஃப் போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் தோல்வியடைந்திருந்தது.

தவிர, ஜப்பானுடனான குழு ஈ போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் கொஸ்டா றிக்கா வென்றிருந்தது.

இதேவேளை, இன்றிரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள ஒரு குழு ஏ போட்டியில் ஈக்குவடோரும், செனகலும் மோதவுள்ளதுடன், மற்றைய குழு ஏ போட்டியில் கட்டாரை நெதர்லாந்து எதிர்கொள்கிறது. தவிர, நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு பி போட்டியில் ஈரானும், ஐக்கிய அமெரிக்காவும் மோதவுள்ளதுடன், மற்றைய குழு பி போட்டியில் வேல்ஸும், இங்கிலாந்தும் மோதவுள்ளன.

ஒரே ஓவரில் 7 ஆறு ஓட்டங்களுடன்

## 43 ஓட்டங்களைப் பெற்ற கைக்கவாட்




முதற்தடவையாக 50 ஓவர்கள் கொண்ட போட்டிகளில் ஒரே ஓவரில் 7 ஆறு ஓட்டங்களை இந்தியாவின் ருத்துராஜ் கைகவாட் பெற்றுள்ளார்.

இந்தியாவின் உள்ளூர் 50 ஓவர்கள் கொண்ட போட்டித் தொடரான விஜய் ஹஸாரே கிண்ணத் தொடரில் உத்தரப் பிரதேசத்துக்கெதிராக அஹ்மதாபாத்தில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியின் ஷிவ சிங் வீசிய இனிங்ஸின் 49ஆவது ஓவரிலேயே மகாராஷ்ராவுக்காக இவ்வாறு ஓட்டங்களை கைகவாட் குவித்துள்ளார்.

முன்னதாக நியூசிலாந்தின் உள்ளூர்ப் போட்டியொன்றில் 2018ஆம் ஆண்டு இரண்டு துடுப்பாட்டவீரர்கள் சேர்ந்தும் 43 ஓட்டங்களை முன்னர் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வலிதான ஆறு பந்துகளில் ஆறு ஓட்டங்களைப் பெற்றதோடு, நோ போல் ஒன்றிலும் ஆறு ஓட்டங்களைப் பெற்ற கைகவாட், இப்போட்டியில் ஆட்டமிழக்காமல் 159 பந்துகளில் 220 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

## சாய்ந்தமருதில் விசேட கராத்தே பயிற்சி முகாம்

அஸ்ஹர் இப்றாஹிம்



விசேட கராத்தே பயிற்சியும், ஆரம்ப தரங்களில் உள்ள மாணவர்களுக்கான தரப்படுத்தல் பரீட்சையும் சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலய உள்ளக அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சர்வதேச தற்காப்புக் கலை சம்மேளனத்தின் பிரதம போதனாசிரியரும், தென் கிழக்கு பல்கலைக்கழக கராத்தே பொறுப்பாளருமான முஹம்மது இக்பாலுக்கு கராத்தே துறையில் அவர் ஆற்றிவரும் மகத்தான சேவையை பாராட்டி ஓட்டமாவடியிலிருந்து கலந்துகொண்ட கராத்தே மாணவர்களின் பெற்றோர் சார்பாக நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி வைத்தனர்.

இப்பயிற்சி முகாமில் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலுமிருந்து கராத்தே வீரர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை எதிர் ஆப்கானிஸ்தான்:

## 2ஆவது ODI-இல் முடிவில்லை



இலங்கை, ஆப்கானிஸ்தானுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி (ODI)-இல் முடிவேதும் பெறப்படவில்லை.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்றிருந்த நிலையில், பல்லேகலவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 229 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, 2.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 10 ஓட்டங்களைப் பெற்றிருந்ததோடு மழை குறுக்கிட்டதால் இப்போட்டியில் முடிவேதும் பெறப்படவில்லை.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 29 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.